...நகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 18 சனிக்கிழமை (02.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 248

# இனப் பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல மன்மோகன் மஹிந்தவிடம் கூறினார்



## மீண்டும் வலியுறுத்துவார் எனத் தகவல்

கொழும்பு,ஒகஸ்ட் 2

இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வு அல்ல என்பதைத் தாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஏற்கனவே கூறியுள்ளதாக கொழும்பு வந்துள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்திருக்கிறார். மீண்டும் ஒருமுறை இதனைத் தாம் மஹிந்தவிடம் வலியுறுத்தப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நேற்று மாலை தம்மைச் சந்தித்த தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் மன்மோகன்சிங் இந்தத் தகவல்களைக் கூறியதாக கூட்டமைப்புவட்டாரங்கள் தெரிவித்தன.

மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே மனித உரிமைகள் நிலைவரத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்றும் ஜனாதிபதி மஹிந்தவிடம் தாம் எடுத்துரைத்திருப்பதாகவும் இந்தியப் பிரதமர் சொன்னார். (12 ஆம் பக்கம் பார்க்க)



# பயங்கரவாதம், உணவு, எரிபொருள் பிரச்சினைகளை 'சார்க்' தலைவர்கள் முக்கியமாக ஆராய்வார்கள்

கொழும்பு,ஒக. 02

15ஆவது சார்க் உச்சிமாநாடு இன்றும் நாளையும் கொழும்பில் நடக்கிறது. இலங்கை உட்பட இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் இந்தியா,பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு ஆகிய நாடுகளின் தலைவர்கள் நேற்று கொழும்பு வந்தடைந்தனர்.

இம்முறை சார்க் மாநாட்டில் பயங்கரவாதம், உணவுப் பாதுகாப்பு, எரிபொருள் போன்ற விடயங்கள் முக்கியமாக ஆராயப்படுகின்றன. அவற்றுடன் 'சார்க்' நாடுகள் எதிர்கொள்ளும் வேறுபல பிரச்சினைகள் குறித்தும் எட்டு நாடுகளின் தலைவர்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## குருதிக் கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக. 2

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் தொடர்ச்சியாக இரத்ததானம்

சிறப்பிதழ் உள்ளே 7 ஆம் பக்கத்தில்

வழங்கிவரும் தன்னார்வக் குருதிக் கொடை (12 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனிக்குள மும்முனை நகர்வு முறியடிப்பு 30 படையினர் பலி; 60 பேர் வரை காயம்

## புலிகள் தரப்பில் நேற்றிரவு தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக. 02

வவுனிக்குளத்திலுள்ள பாலையடிப் பகுதியில் படையினர் மேற்கொண்ட பாரிய அளவிலான மும்முனை முன்நகர்வு நடவடிக்கை, தங்களின் தீவிர தாக்குதலால் முறியடிக்கப்பட்டுள்ளது என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளார்கள். இதில் 30க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 60 இற்கும் அதிகமானோர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவு அதிகரிப்பு ஆனந்தவிகடன் கருத்துக்கணிப்பில் நிரூபணம்

சென்னை, ஒக 02

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கும் தமிழகத்தில்மக்கள்மத்தியில்பெரும்பான்மை ஆதரவு இருப்பது கருத்துக்கணிப்பு ஒன்றின் மூலம் தெரிய வந்திருக்கின்றது.

தமிழகத்தின் முன்னணி ஏடான ஆனந்த விகடன் நடத்திய கணிப்பீட்டிலேயே இது தெரிய வந்திருக்கின்றது.

தமிழகத்தில் புலிகளுக்கு 54.25 சதவீத ஆதரவு இருப்பதாக இந்தக் கணிப்பீட்டில் தெரியவந்திருக்கிறது. தமிழர்களின் பிரச்சினைக்குத் தமிழீழமே சிறந்த தீர்வு என்று 55.44 சதவீதமானவர்கள் கருதுகிறார்கள். அதேவேளை, விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா நீக்கவேண்டும் என்று 47.65 வீதமானோர் விரும்புகிறார்கள்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டுத் தீர்வு காணவேண்டும் என்று (12 ஆம் பக்கம் பார்க்க)

# நேற்றுமாலை நிகழ்ந்த பகுதிச்சூரியகிரகணம்; பலரும் ஆர்வத்துடன் பார்த்தனர்......

யாழ்ப்பாணம், ஒக. 2

நேற்று நிகழ்ந்த இயற்கையின் நிகழ்வான பகுதிச் சூரிய கிரகணத்தை குடாநாட்டில் தெளிவாகக் காணக் கூடியதாக இருந்தது.

புகையூட்டிய கண்ணாடிகளைப் பிடித்தும் கறுப்புக் கண்ணாடிகள் அணிந்தும் பெரும் எண்ணிக்கையானோர் அதனைப் பார்த்தனர். சூரியன் இளமஞ்சள் (ஒரேஞ்) வர்ணத்தில் தென்பட்டது. நேற்று மாலை 4.58மணியளவில் தேய்ந்த சூரிய கிரகணத்தை முதன்முதலில் மேற்கு வானில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முழுமையான அர்ப்பணிப்பு; மன்மோகனிடம் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 02

"13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு எனது அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது."

- இவ்வாறு சார்க் அரச தலைவர்கள் மாநாட்டுக்காக கொழும்பு வந்திருக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடனான சந்திப்பின்போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதி கூறியிருக்கின்றார்.

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் இணக்கப்பாட்டை உருவாக்குவதற்கான சிபாரிசுகளை முன்னெடுக்கும் நடவடிக்கையில் அனைத்துக் கட்சிப்பிரதிநிதிகள் ஈடுபட்டுவருகின்றனர் என்றும் மன்மோகனிடம் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இந்தியப் பிரதமர் தெரிவிக்கையில்- அயல் நாடுகளுடன் நெருக்கமான உறவு இல்லாமல் எந்த ஒரு நாடும் தனது (12 ஆம் பக்கம் பார்க்க)

ஐந்து வெவ்வேறு நேரங்களில் சூரிய கிரகணத் தோற்றங்கள் வரிசைக்கிரமப்படி (படங்கள்- ஏ.பாஸ்கரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

இளவாலை வெண்புறா இளைஞர் கழகம் நடத்தும் மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி நாளை (03.08.2008) ஞாயிறு பி.ப 2மணிக்கு நடைபெறவுள்ளது. அனைவரை யும் அழைக்கிறோம்.

வெண்புறா இளைஞர் கழகம்,
இளவாலை.

## Alliance Francaise De Jaffna

83, Palaly Road, Kantharmadam, Jaffna Phone: 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com

**Apprenez le Francais a la maniere Francaise**
**பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்**
**Cours de Francais பிரெஞ்சு மொழிவகுப்புக்கள்**

இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் மூலமும் Alliance Francaise de Paris இன் மூலமும் மேற்கொள்ளப்படும் பிரெஞ்சு மொழி வகுப்புகளில் ஆர்வமுள்ள அனைவரும் கற்கலாம்.

தொடர்ச்சியான 100 h கற்கையின் மூலம் உள்ளக பரீட்சைக்கும் 200 h கற்கையின் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைக்கும் தோற்ற முடியும். (Diplome Elementaire de Langue Francaise)

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 09.08.2008 சனிக்கிழமை காலை 8.30 am

பதிவுகளை உடன் மேற்கொள்ளவும். கட்டணம் ஏனைய விவரங்களை நேரில்/ தொலைபேசியின் ஊடாக பெறலாம். (76833)

## விற்பனைக்கு

வர்ண கலர் மீன்கள், வர்ண கலர் குருவிகள் (யாவா) Love Birds (Fanges) மற்றும் மீன் தொட்டி உபகரணங்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள.

பிரசன்னா அக்கூறியம் (Aquarium)
இல. 69, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
(தொன்வென்ற் முன்பாக)

## தவறிவிட்டது

சொர்ணலிங்கம் சுகந்தினி (யா/புன்னாலைக்கட்டுவன் அ.த.க பாடசாலை) என்பவரது 07.09.2005 திகதியிடப்பட்ட பட்டதாரி ஆசிரிய நியமனப்பத்திரம் K.K.S.Roadற்கும் இணுவிலுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும்.

ஐங்கரன் டொட்.கொம்
K.K.S Road, இணுவில் ஆஸ்பத்திரி முன்பாக, இணுவில்.

## வீடு வாடகைக்குதேவை

கௌரவமான மூன்றுபேர் கொண்ட சட்டத்தரணி குடும்பத்திற்கு மானிப்பாய் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

விளம்பர இல:- 3122
மே/பா உதயன்.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

சர்வதேச மருத்துவ சேவை அமைப்பின் இலங்கைப்பிரிவினால் யாழ்ப்பாணத்தில் கடந்த 10நாள்களாக நடத்தப்பட்ட அவசர முதலுதவி சிகிச்சைப் பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படும் நிகழ்வு இன்று பி.ப 2.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (1-86)

## வேலை வெற்றிடம்

### கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை, மானிப்பாய்
**ஸ்தாபகம் 1848**

1. கணக்காளர் (Accountant) பதவிக்கு 11.08.2008க்கு முன் விண்ணப்பிக்கலாம். தேவையான ஆவணங்களுடன் மருத்துவ மேலதிகாரி, கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை, மானிப்பாய் அவர்களிடம் தொடர்புகொள்ளவும்.

2. பகல் நேரக் கடமைக்கு M.B.B.S. பட்டம் பெற்ற மருத்துவர் 11.08.2008 இக்கு முன் விண்ணப்பிக்கலாம். மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை மருத்துவ மேலதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**Medical Superintendent**
மருத்துவ மேலதிகாரி,
கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை, மானிப்பாய். (76843)
தொ.பே. :021 222 2747

## அறிவித்தல்



### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதானசபை
### ஆடிப்பூர அன்னதானம்

அம்பிகை அடியார்களே!

எதிர்வரும் 04.08.2008 திங்கட்கிழமை நடைபெற இருக்கும் ஆடிப்பூர விழாவை முன்னிட்டு அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு வழமை போல் அன்னதானம் வழங்க எமது சபையினர் சகல ஒழுங்குகளும் செய்துள்ளனர்.

எனவே அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்கள் அமுதசுரபி அன்னதான சபைக்குச் சமுகமளித்து அன்னதானத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். (76846)

நிர்வாகம், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுத சுரபி அன்னதான சபை.

## திறனாய்வு அரங்கு

மந்திகை, ஓக. 2

ஆனந்தமயில் எழுதிய 'ஓர் எழுது வினைஞனின் டயறி' எண்ணும் சிறு கதைத் தொகுதி திற னாய்வு அரங்கு இன்று சனிக் கிழமை பொலி கண்டி இந்துத் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வி.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் கலந்து கொள்வார். (203-218)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
20.12.1948

உதிர்வு:
25.07.2006

திதி: 02.08.2008

### அமரர் அப்புத்துரை இராசதுரை
(இளைப்பாறிய ஆசிரியர்,
யா/கொக்குவில் நாமகள் வித்தியாலயம்)

ஆண்டுகள் இரண்டானாலும் உம் பிரிவால் எம்துயர் நீங்காது. உம் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

7, கேசாவில் வீதி,
வண் – மேற்கு,
யாழ்ப்பாணம். (76844)

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேர்த்தி - அஜானா.

# மரண அறிவித்தல்

## குழந்தைவேல் நடராஜன்



### (காசநோய் தடுப்பு முன்னாள் உத்தியோகத்தர்)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேல் நடராஜன் 28.07.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேல் (மலாயன் பென்சனியர்) - சரஸ்வதி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்) - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சாவித்திரி (ஜேர்மனி), விஜயகுமார் (ஆஸ்திரேலியா), ரவிக்குமார் (கனடா),காயத்திரி (லண்டன்) ஆகியோரின் தந்தையும், மகாதேவன் (ஜேர்மனி), வசந்தா (ஆஸ்திரேலியா), பாமினி (கனடா), சூரியகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற அத்தியட்சகர், மதுவரி திணைக்களம் ), காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் யோகரட்ணம், சகுந்தலா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், தவமணிதேவி (லண்டன்), விஜயா ஆகியோரின் சகோதரரும், ஷாளினி, கோகுலன், ஜனனி, அஞ்சலி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

29, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.தொ.பே. 021 222 3586 (76847)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபையால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாழ்.பிரதேச செயலர் ம.ஜெகூ, மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் ஆகியோர் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பதை முதல் மூன்று படங்களிலும் காணலாம். யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ உரையாற்றுவதை நான்காவது படத்தில் காணலாம். (படங்கள்: நம்பி)

## சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் நுழைவாயில்

யாழ்ப்பாணம்,ஓக.2

சாவகச்சேரி வீ.எம்.கே. நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் முகப்பு நுழைவாயில் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வீ.எம்.கே நிறுவன உரிமையாளர் க.புலேந்திரன் புதிய நுழைவாயிலை வைபவ ரீதியாகத் திறந்துவைத்தார்.

நிறுவனத்தின் ஸ்தாபகர் வீ.எம்.கணபதிப்பிள்ளை - திருமதி பராசக்தி கணபதிப்பிள்ளை ஆகியோரின் நினைவாக இரண்டு லட்சம் ரூபா செலவில் புதிய நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-207)

## ஊர்காவற்றுறை சுகாதாரப் பணிமனையின் கட்டடப் பணிகள் இடைநடுவில் ஸ்தம்பிதம்

### பிரதேச மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஓக.2

ஊர்காவற்றுறையில் அமைக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கான கட்டடப் பணிகள் அத்திவார வேலைகளுடன் மட்டும் உள்ளன. நீண்டகாலமாக மிகுதி வேலைகள் எவையும் மேற்கொள்ளப்படாமை குறித்து பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் நீண்டகாலத்திற்கு முன்னர் மேற்படி கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அத்திவார வேலைகள் மட்டும் முடிவடைந்தன. எனினும் அதன் பின்னரான எந்தப் பணிகளும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

பிரதேச மக்களின் நலன்கருதி கட்டடப்பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (202- 325)

## மேலைப்புலோலி நாவலர் ச.ச.நிலைய பொன்விழாவை முன்னிட்டு போட்டிகள்

மந்திகை,ஓக.2

மேலைப்புலோலி நாவலர் சனசமூக நிலையத்தின் பொன்விழாவையொட்டி பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் 10ஆம் திகதிவரை போட்டிகள் நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, மனனம், பண்ணிசை, பொதுஅறிவு, சதுரங்கம் ஆகிய போட்டிகளும் -

திறந்த போட்டிகளாகக் கவிதை, கட்டுரை, சதுரங்கச் சுற்றுப்போட்டி, 20X20 கிரிக்கெற் சுற்றுப்போட்டிகள் ஆகியவையும் நடத்தப்படவுள்ளன.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கர்ப்பிணித் தாய்மாரின் போஷாக்கை மேம்படுத்த சுகாதாரத் திணைக்களம் விசேட திட்டம்

### அமெரிக்க சுகாதார நிறுவன உதவியுடன் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.2

அமெரிக்காவின் சர்வதேச மருத்துவ சுகாதாரக் கழகத்தின் உதவியுடன் யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களம் யாழ்.மாவட்டத்திலுள்ள போஷாக்குக் குறைவான கர்ப்பிணித் தாய்மாருக்கான விசேட போஷாக்கு மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

உடற்திணிவுச் சுட்டெண் 18.5இற்குக் குறைவாக உள்ள கர்ப்பிணித் தாய்மாருக்காகவே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 500 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கு உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக ஆயிரம் பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு என்பமாமா என்னும் விசேட பால்மா, ஜீவாகாரம், நுண்ணூட்டச்சத்து வில்லைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. (202)

## செவிப்புலனற்றோர் நிறுவன ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஓக.2

இலங்கை செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் 5ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சீனியர் லேன், கலட்டியில் உள்ள நிறுவனத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் கலந்துகொள்வார். (202)

### நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

## உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்திற்கென பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்

நல்லூர்,ஓக2

உலக வங்கியின்வடக்கு-கிழக்கு மாகாண வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

பிரிவிலுள்ள 13 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

ஜே/91, ஜே/ 93, ஜே/95, ஜே/98, ஜே/102, ஜே/105, ஜே/106, ஜே/110, ஜே/113, ஜே/116, ஜே/120, ஜே/123, ஜே/127 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்தே பயனாளிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மேற்படி கிராமங்களில் உள்ள கிராம மட்டக் குழுக்கள் பிரிவு கிராம அலுவலர்களின் வழிகாட்டலுடன் பயனாளிகள் தெரிவிற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், புனர்வாழ்வுப் பிரிவின் கிராம உத்தியோகத்தர்களும் இச்செயற்பாட்டில் பங்கெடுப்பர் என பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (202-111)

## கல்வியியற் கல்லூரி கொடுப்பனவு இன்று

யாழ்ப்பாணம்,ஓக.2

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கான ஜூலை மாதக் கொடுப்பனவு இன்று சனிக் கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படும் என்று பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார். (1-203)

## மாணவர்கள் இலக்கிய ஆக்கங்களை எழுதுவதற்கு தூண்டுவதோடு அவற்றை ஆவணப்படுத்தவும் வேண்டும்

### இணுவில் மத்திய கல்லூரி அதிபர் பாடசாலைகளுக்குத் தரும் யோசனை

இணுவில்,ஓக.2

மாணவர்கள் இலக்கிய ஆக்கங்களை எழுத பாடசாலைகள் ஊக்கப்படுத்தவேண்டும். அத்துடன் அவற்றை ஆவணப்படுத்தவும் வழிகாட்டவேண்டும்.

இவ்வாறு இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அ.சதானந்தன் கருத்து வெளியிட்டார். இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களின் ஆக்கங்கள் அடங்கிய தொகுப்பாக 'கலைக்கதிர்' நூல் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ்விழாவில் உரையாற்றுகையிலேயே அதிபர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

கலை ஆர்வம் மிக்க மாணவர்களை இனங்கண்டு அவர்களின் கலைத்திறனை வளர்த்தெடுக்க வேண்டும். அவர்களின் ஆக்கங்களைப் பாடசாலை மட்டத்துள் வைத்திருக்காது நூல்களைத் தொகுப்பதன் மூலம் எதிர்காலச் சந்ததிக்குக் கையளிக்கும் ஆவணங்களாக அவை விளங்கும்.

அது மட்டுமின்றி அவர்களின் ஆற்றல்களைச் சமூகத்துக்கு அறிமுகப்படுத்துவதோடு, மூத்த கலைஞர்களின் வழிகாட்டலைப் பெற்றுக் கொடுக்கவும் இந்நூல்கள் உதவி செய்யும் - என்றார்.

இவ்விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றிய கல்லூரியின் ஓய்வுபெற்ற தமிழாசிரியரான திருமதி த.மகாலிங்கம் -

மாணவர்களிடம் பல வகையான உள்ளார்ந்த ஆற்றல்கள் காணப்படும். ஒருவரது உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்வதுதான் கல்வி. 13 வருடங்கள் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மாணவன் பாடசாலையில் இருந்து எதனைக் கொண்டு செல்கிறேன் என்று சிந்திக்கும்போது இத்தகைய நூல்கள் துணைவரும் - என்றார்.

[illegible] நிகழ்த்திய ஆசிரியர் ம.பா. மகாலிங்கசிவம் -

மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளுக்கு அப்பால் இலக்கியத்துறையிலும் ஈடுபட வேண்டும். நல்ல எழுத்தாளராக வருவதற்கு, முதலில் நல்ல வாசகர்களாகவும் இலக்கிய ரசிகர்களாகவும் இருக்கவேண்டும். மூத்த படைப்பாளிகளின் இலக்கியப் படைப்புகளையும் சமகாலச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பற்றையும் வாசிக்க வேண்டும். தரமான படைப்புகளை இந்நூலில் எழுதியுள்ள மாணவர்கள் பாடசாலைக்கு அப்பால் சஞ்சிகை, பத்திரிகைகள் என்பவற்றிலும் எழுத வழிகாட்டவேண்டும் - என்றார்.

தமிழ் மன்றத் தலைவர் ம.நிரோஜ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில மன்றப் பொறுப்பாசிரியர் அ.சத்தியேந்திரன், மாணவிகளான சி.சிந்து, த.நாரணி ஆகியோரும் உரையாற்றினர். (202-55)

## முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.2

கரவை சிந்தாமணி விநாயகர் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பதில் மாவட்ட முகாமையாளர் எஸ்.மகேந்திரன் கலந்துகொள்வார். (202)

அன்பார்ந்த வாசகர்களே! ஒரு நற்செய்தி!!

அன்றும் இன்றும் உங்கள் அபிமானப் பத்திரிகையாக விளங்கும் உதயனில் நீங்கள் பிரசுரிக்கும் பின்வரும் விளம்பரங்கள் உதயன் இணையத்தளப் பதிப்பிலும் கொழும்பிலிருந்து வெளியாகும் சகோதரப் பத்திரிகை சுடர்ஒளியிலும் எவ்வித மேலதிக கட்டணமும் இன்றி இலவசமாகப் பிரசுரிக்கப்படும்.

☆ பிறந்த தின வாழ்த்துக்கள்
☆ நினைவஞ்சலிகள்
☆ மரண அறிவித்தல்கள்
☆ கண்ணீர் அஞ்சலிகள்

உதயன் விளம்பரப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி மற்றும் சமூகப் பணிகளோடு மட்டுமன்றி பத்திரிகைத்துறையிலும் ஆர்வத்துடன் உழைத்தவர்



கல்விப்பணி - சமூகப்பணி - பத்திரிகைப்பணி என முத்துறைகளிலும் ஈடுபட்டு உழைத்தவரான மானிப்பாயைச் சேர்ந்த இளையவன் வல்லிபுரம் கடந்த மார்ச்மாதம் இறைபதம் அடைந்தார்.

எல்லோரிடத்திலும் அன்பாகவும் இனிமையாகவும் பேசிப் பழகிய அவர் சமூகத்திற்கான சேவையினை முழுமனதோடு கடைசிவரை நிறைவேற்றியவர். உடுப்பிட்டி இமையாணனைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

உடுப்பிட்டி இமையாணன் பிரதேசத்தில் இமையாணன் மகாவித்தியாலயம் உருவாகுவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவர் இவர். பின்னர் அப்பாடசாலையின் முதலாவது அதிபர் பணியேற்றும் சேவை செய்தார்.

பின்னர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் புகழ்பூத்த ஆசிரியராக கடமையாற்றி அதிபராகவும் பதவி உயர்வு பெற்றார்.

பின்னர் நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் அதிபராக பணியாற்றி இறுதியாக இளைப்பாறினார்.

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை விளையாட்டு மைதாணமின்றி இருந்த நிலையில் அப்பாடசாலைக்கு அருகில் இருந்த சதுரக் காணியை பாடசாலையின் விளையாட்டு மைதானமாக உருவாக்கிய பெருமை வல்லிபுரம் மாஸ்ரரைச் சாரும்.

வலி. தென்மேற்கு பகுதி மக்களுக்கு சமூகப்பணியூடாக உதவவேண்டும் என்ற நோக்கில் மானிப்பாய் சமூக, சுகாதார, சுற்றாடல் விவகார சபையை ஸ்தாபித்து-அதன் முதல் செயலாளராக பணியாற்றினார்.

இதன் ஊடாக மானிப்பாய் - டச்சு வீதியில் "மத்திய மருந்தகமும் மகப்பேற்று மையமும்" அமைய எண்ணக்கருபத்திரங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரசாங்க அதிபருக்கும், பிரதி மாகாண சு.சே. பிரதிப் பணிப்பாளருக்கும் அனுப்பி இறுதி வரை பாடுபட்டவர்.

அத்துடன் மானிப்பாயில் நிரந்தர தபால் கந்தோர் அமைப்பதற்கான காணி, மானிப்பாய் கருத்தரங்கு மண்டபம் அமைப்பதற்கான காணி என்பனவற்றை தேடிபெற்றுக் கொடுக்க வழியமைத்தார்.

இவ்வேளையில் இவரது உயர்ந்த சமூகப் பணிக்கு அகில இலங்கை சமாதான நீதவான் (Justice of the peace) பட்டம் கிடைத்தது.

இதே காலப்பகுதியில் மானிப்பாய் வடக்கு வளர்மதி ச.ச. நிலைய போஷகராகவும்,

மானிப்பாய் வடக்கு விவசாயிகள் சம்மேளன செயலாளராகவும் இருந்து விவசாயிகளுக்கான மானிய நெல், உரங்களையும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விண்ணப்பித்து பல உதவி திட்டங்களைப் பெற்றுக் கொடுத்து விவசாயிகளின் தோழனாகவும், விவசாயிகளின் நண்பனாகவும் இருந்து செயல்பட்ட செயல் வீரன் வல்லிபுரம் மாஸ்ரர்.

இது தவிர போரூட் கிராமிய குழுவின் போஷகராகவும், மானிப்பாய் சிக்கனக்கடன் உதவிச் சங்கத்தின் தலைவராகவும் மிகப்பெரும் சமூகப்பணியாற்றியவர்.

சமயப்பணி - சமூகப்பணியுடன் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்திலும் மானிப்பாய் பிரதேச பத்திரிகையாளராகவும் நீண்டகாலம் கடமையாற்றினார்.

ஒரு பத்திரிகையாளனுக்குரிய சமூகப் பொறுப்புணர்வுடன் நோய்வாய்ப்பட்ட பின்னரும் அதனை நேர்த்தியாக ஆற்றியவர்.

பத்திரிகை நிறுவனத்தில் செய்தியாளராக இருந்து செய்திகள், கட்டுரைகள், கமமும்புலமும் பகுதி செவ்விகள் போன்றவற்றை எழுதி சமூக நன்மதிப்பை பெற்ற ஓர் எழுத்தாளனும் ஆவார்.

மானிப்பாய் பிரதேச சபை ஆலோசனைச் சபையிலும், அபிவிருத்தி சபையிலும், நூலக ஆலோசனை சபையிலும் இருந்து சேவையாற்றியவர்.

-எஸ்.ரமேஷ்.

## நீத்தார் நயப்புரை

# யாழ். கால்பந்தாட்ட துறையின் பெருமையை நிலை நாட்டிய முது பெரும் வீரர் இரத்தினகோபால்

அண்மையில் மறைந்த ஆ.இரத்தினகோபால் இலகையின் தலைசிறந்த கால் பந்தாட்ட வீரர்களில் ஒருவராவார். இவர் யாழ்ப்பாணத்தில் காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் சிறுவயதிலிருந்தே கால்பந்தாட்டத்தில் ஆர்வம் காட்டி சிறந்த வீரராக விளங்கினார். அத்துடன் யாழ். மத்திய கல்லூரியின் புகழ் பெற்ற கால்பந்தாட்ட வீரராகத் திகழ்ந்தார். பின்பு யாழ். இந்துக் கல்லூரியில் படித்த போது அங்கு கால்பந்து அணியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு தனது விளையாட்டு நுட்பங்களைக் காட்டி மேலும் பலராலும் பாராட்டப்பட்டார்.

1945 ஆம் ஆண்டு யாழ். மாவட்டக் கல்லூரிகளில் திறமையான கால்பந்தாட்ட வீரராக தெரிவு செய்யப்பட்டார். இவர் ஏனைய வீரர்களை விட வெகு உற்சாகமாகவும் சாமர்த்தியமாகவும் விளையாடுவதில் பிரபலமானவர். 1954 ஆம் ஆண்டு சென்னை அணிக்கு எதிரான போட்டியில் யாழ்ப்பாண அணியின் தலைவராக இவர் தெரிவானார். இலங்கையில் பிரபல்யமான அரசாங்க கால்பந்தாட்ட குழாமின் யாழ். மாவட்ட தலைவராக இவர் 1956 ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டார். 1960 ஆம் ஆண்டு இக்குழுவிற்கு பயிற்றுனராக கடமையாற்றினார்.

யாழ்ப்பாண விக்டோரியன் குழுவில் விளையாடியும் தலைமை வகித்தும் பேரும் புகழும் பெற்று பலராலும் பாராட்டப்பட்டார். யாழ்ப்பாண விக்டோரியன் குழுவுக்கு விளையாடும் வாய்ப்பையும் பெற்றுத் தந்தவர். யாழ். இந்துக்கல் லூரியின் பயிற்றுன ராக சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து இக்கல்லூரிக்கு புகழைத் தேடிக்கொடுத்தவர். இக்காலத்தில் யாழ். இந்துக் கல்லூரியே அதிகமான முறை சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. இவர் தனது கிராமத்திலுள்ள பாடசாலைகளுக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கும் பயிற்றுனராக பணிபுரிந்தவராவார்.



இவர் விளையாட்டுத்துறையில் கூட நீதியாகவும், நடுநிலைமையாகவும் நடப்பவராக மக்கள் பெரிதும் பாராட்டினார்கள். யாழ்ப்பாணத்தில் கால்பந்தாட்டம் என்றால் இரத்தினகோபால், இரத்தினகோபால் என்றால் கால்பந்தாட்டம் என்று ஒரு காலம் இருந்தது.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேலாக கால்பந்தாட்டத்துறையில் சேவை செய்து புகழ் ஈட்டிய பெருமை இவருக்கு உரியது. இவரின் புகழ் கால்பந்தாட்டத்துறையில் என்றும் நிலைத்து இருக்க இறைவனை வேண்டுகின்றோம்.

- ஏ. கே. நடராசா.


விசேட சிறப்புச் சலுகை 50% Special Offer...

SPECIAL OFFER

டிப்ளோமா கற்கைநெறிகளுக்கான விசேட பிரிவுகள் இம்மாதம் 3,5ம் மற்றும் 7ம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

- Diploma in Ms Office
- Diploma in Web Design
- Dip in Desktop Publishing
- Dip in Computerised Accounting

Select any Course & pay 3900/= only

Duration : 3 Months

இலவச பாடநூல்கள் மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்களுக்கான பாடநெறிகள்.

கணக்கியல் துறையில் ஓர் புதிய பரிமாணம்

Certified Computer Accountant

Tally ies 9.0

உலகின் முன்னணி Accounting Software

Duration : 2 Months

A/L மாணவர்கள், HNDA , AAT, பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்கள் அனைவருக்குமான கட்டணச்சலுகை.

ASIAN-CSC COMPUTER EDUCATION

2G,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel :021 222 5677

கிளை : கொடிகாமம் வீதி,


# வலி.மேற்கு பிரதேசத்தில் 8 பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

சங்கானை,ஒக.2

வலி.மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 8 பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளுக்கென 7 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிறிகாந்தா பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து இந்த நிதியை வழங்கியுள்ளார்.

அராலி முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், அராலி இந்துக் கல் லூரிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வும், சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபாவும் மூளாய் அ.மி.த.க. பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபாவும் -வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தி யாலயத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும், வட்டு. இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், மூளாய் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலைக்கு ஒரு லட்சம் ரூபாவும், வட்டு.சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலைக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-29)

# சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இன்று புலமைப்பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக.2

சாவகச்சேரி பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இலவச வழி காட்டல் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 8 மணிதொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கு நிகழ்வில் ஆசிரியர் வே.அன்பழகன் கருத்துரை நிகழ்த்துவார். முன்னோடிப் பரீட்சையில் 90 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்ளை தமது பாடசாலை ஆசிரியர்களுடன் சமுகமளிக்க மாறு கேட்கப்பட்டுள்ளது. (202–131)


## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### வெளிவாரிப் பரீட்சைகள்- 2007

1. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி-I- 2005 &2006 (மீள் பரீட்சார்த்திகளுக்கானது)
2. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி-II- 2004&2005 (மீள்பரீட்சார்திகளுக்கானது)
3. சிறப்புக் கலைமாணி பகுதி-III- 2004 (மீள்பரீட்சார்த்திகளுக்கானது)

மேற்படி பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி-I, பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி-II மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி- III பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பரீட்சைகளுக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிச் கிளையில் ரூபா.100 இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினை பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா. 100 இற்கான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா 40 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன் **உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்புதல்வேண்டும்.


மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் 29.08.2008 (வெள்ளிக்கிழமை) வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். (முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும். மேலதிக விவரங்களுக்கு 021- 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்.**
01.08.2008 (சி/553997)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம் 12.01.1926



அஸ்தமனம் 02.08.2002

## திருமதி றோசிஜெயமணி யோகலிங்கம்

பாசத்தை வழங்களித்து
பாதியிலே பிரிந்தாயோ
பதறியே துடிக்கின்றோம்
உன்னைத் தினம் எண்ணி
பாரினிலே வந்திருவாயா?
எங்கள் குலவிளக்கே!

"கோவிந்த வாசா",
போற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

திருமதி வி.யோகவதனி (மகள்),
மருமகன், பேரப்பிள்ளைகள்
(லண்டன்).

(76639)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடம்பரமான ஏற்பாடுகளுடன் பெரும் பணச் செலவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் விளையாட்டு விழாக்கள்

## வீரர்களுக்குக் கிடைப்பதோ வெறும் கேடயம் மட்டும் தான்!

**யாழ்.** மாவட்டத்தில் இடம்பெறும் விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுசரணை வழங்குபவர்கள் பல போட்டிகளுக்கு அனுசரணையாளர்களாக செயற்படுவதிலும் பார்க்க குறிப்பிட்ட ஒன்று, இரண்டு போட்டிகளுக்கு முழுமையான அனுசரணையாளர்களாக செயற்படுவது கூடிய பயனை விளையாட்டுத் துறைக்கு வழங்கும் என விளையாட்டு ஆர்வலர் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் விளையாட்டுத் துறையில் உள்ளவர்களினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஒன்று விளையாட்டுத் துறைக்கு முழுமையான அனுசரணையாளர்கள் கிடைப்பதில்லை என்பதாகும். இதனால் யாழ்.குடாநாட்டில் விளையாட்டுத்துறை செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதிலும் வீரர்கள், வீராங்கனைகளை வளர்த்தெடுப்பதிலும் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன.

இன்று இந்த நிலைமையில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. அனுசரணையாளர்கள் கொட்டிச் சிந்தக் கூடியளவுக்கு தராவிட்டாலும் போட்டிகளை நல்ல முறையில் நடத்திச் செல்ல உதவி செய்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது.

அண்மைக் காலத்தில் அரச வங்கிகள், தனியார் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள் என்பன அனுசரணையாளர்களாக செயற்படுவதுடன் தனியார் வர்த்

### குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

தகரான ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் தனி மனிதனாக விளையாட்டுத்துறைக்கு பாரிய உதவிகளை செய்து வருகின்றமையும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தையும் குறிப்பிடவேண்டும். எல்லோரும் போய் ஒரே மனிதரை, நிறுவனத்தை அனுசரணை, கேட்பது பொருத்தமற்றது. இதேபோன்று கேட்பவர்களுக்கு எல்லாம் அனுசரணை வழங்க வேண்டும் என்ற நிலையில் இருந்து அனுசரணையாளர்களும் விடுபடவேண்டும். அவர்களும் தேவை உணர்ந்து ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று ஒன்று இரண்டு போட்டிகளுக்கு முழுமையான அனுசரணையாளர்களாக செயற்படுவதன் மூலம் விளையாட்டுத்துறைக்குப் பல்வேறு நன்மைகள் கிடைக்கும்.

அண்மையில் யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் தலைவரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபருமான நோயல் விமலேந்திரன் குறிப்பிட்ட ஒரு கருத்தை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கு இடையே கிரிக்கெட் போட்டிகள் மாவட்ட அடிப்படையில் இடம்பெறவுள்ளது. வழங்கப்படும் பரிசுகள் எந்தக் காலத்திலும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். ஒரு காலத்தில் இருக்கும் நிர்வாகக்குழு செல்வாக்குமிக்கதாக இருந்தால் கூடிய

### அனுசரணையாளர்களிடம் வெறப்படும் பணத்துக்கு கணக்கு விவரங்கள் காட்டப்படாதது ஏன்?

பெறுமதியான பரிசுகள் வழங்குவதும் அடுத்த வருடத்தில் குறைந்த பெறுமதி உடைய பரிசுகள் வழங்கப்படுவது என்ற நிலைமை காணப்படக்கூடாது.

பரிசுகள் விடயத்தில் என்றும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். இதற்கு ஏற்ப நிதியை சேகரித்து வங்கியில் வைப்புச் செய்து எதிர்காலத்தில் பயன்படுத்தவேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இன்று விளையாட்டுப் போட்டிகள் களியாட்ட விழாவாகவே இடம்பெறுகின்றன. பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றின் போட்டிகள் விளையாட்டுச் சங்கங்களின் போட்டிகள், கழகங்களின் போட்டிகள், பாடசாலைகளின் போட்டிகள், முன்பள்ளிகளின் போட்டிகள், வலயங்களின், கோட்டங்களின் போட்டிகள் என விளையாட்டுப் போட்டிகளின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றன.

ஒவ்வொரு போட்டிகளிலும் பல ஆயிரம் முதல் லட்சங்கள் வரை செலவுகள் செய்யப்படுகின்றன. விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு அதில் எந்தளவு பயன் பணப்பெறுமதி ரீதியாகக் கிடைக்கின்றது என்பது விவரமாக ஆராயப்படவேண்டிய ஒன்றே.

செலவுகளில் பெரும்பாலானவை மாலைகள், அலங்கரிப்புகள், உணவு என்பவற்றுக்கே செல்கின்றன. இறுதியில் வீரர்கள், வீராங்கனைகளுக்கு கிடைப்பது வருடாந்தம் வழங்கப்படும் வெற்றிக்கிண்ணம், கேடயம் மீண்டும் தூசிதட்டி வழங்கப்படும்.

இந்த நிலைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். தேவையற்ற செலவுகள் குறைக்கப்படவேண்டும். குறிப்பாக மாலைச் செலவுகள், உணவுச் செலவுகள் உட்பட பல விடயங்களில் கவனம் எடுத்தால் செலவுகளை மட்டுப்படுத்தலாம். வீரர்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் போட்டியில் பங்கு கொண்டு வெறும் வெற்றிக்கேடயத்தை மட்டுமே கொண்டு செல்கின்றார்கள்.

இதற்கு நாம் அனுசரணையாளர்களுக்கு உண்மையான கணக்கு விவரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். அவர்களும் அதில் உள்ளவற்றைப் புரிந்துகொண்டு அடுத்த துடவை கடந்தாண்டைவிட கூடிய தொகையை தர முயற்சிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த கணக்கு விடயம் இன்று எந்தளவுக்கு வெளிப்படுத்தப்படுகின்றன என்பது பெரும் கேள்விக்குரியதாகவே உள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று பணம் கிடைத்துவிட்டது. இனி அனுசரணையாளர்களுக்கு கணக்குக் காட்ட வேண்டியதில்லை என்ற நிலைமையே இன்று காணப்படுகின்றது.

பொதுவாகப் பணத்தை சேகரிப்பவர்கள் கணக்கு விடயத்தில் கூடிய கவனமும் அக்கறையும் காட்டவேண்டும். கணக்குகள் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். இது உண்மையில் அனுசரணையாளர்களை மேலும் ஊக்குவிப்பதாக அமையும். தாம் வழங்கிய பணம் நோக்கத்தை அடைந்துள்ளதாக? என்பதை அவர்கள்அறியவேண்டும்.

இதேபோன்று அடுத்தவர்களும் அறிய வேண்டும். உண்மை, நேர்மைத்தன்மையைக் கண்டு அடுத்தவர்கள் தானாக பண உதவி செய்ய முன்வருவார்கள். இன்று போட்டிகளுக்கு அனுசரணையாளர்கள் வழங்கும் பணம் எப்படியும் செலவு செய்யப்படலாம் என்ற நிலை காணப்படுகின்றது.

இத்தகைய செயற்பாடுகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். சிறந்த முகாமைத்துவமும் நிர்வாக ஒழுங்கும், நிதிக் கட்டுப்பாடும் காணப்படவேண்டும். இதன் மூலம் சாதிக்கக் கூடிய விடயங்கள் ஏராளம்.

இப்போது பல அமைப்புகள் விளையாட்டுப் போட்டிகளையும்நடத்துகிறார்கள். இங்கும் ஒரு சிறந்த ஒழுங்கமைப்பு இன்மையால் மத்தியஸ்தர்கள், நடுவர்கள் காத்திருக்க வேண்டி ஏற்படுவதுடன் தேவையற்ற செலவுகளும் ஏற்படுகின்றன.

போட்டி நிரலில் குறிப்பிட்ட கழகம் அல்லது அணி அல்லது பாடசாலை கலந்து கொள்வதாக குறிப்பிடப்பட்டு இருக்கும். எனினும் அந்த கழகத்துக்கு அல்லது அணிக்கு அது பற்றிய அறிவுறுத்தல் கிடைப்பதில்லை. இவ்வாறு ஒரு ஒழுங்குமுறையற்ற வகையிலேயே இப்போது அதிகமான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

எனவே சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் போட்டிகள் நடத்தப்படவேண்டும். இதன் மூலம் பல பயன்களை நாம் பெறமுடியும். போட்டிகளை உரிய காலத்தில் பயன்மிக்கவையாக நடத்தி முடிக்கலாம். இதன் மூலம் அனுசரணையாளர்களுக்கும் திருப்தியும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

பணம் உள்ளது தானே என்று செலவை உண்டாக்காது தேவைக்குச் செலவு செய்துவிட்டு மிகுதியை சேமித்தால் எதிர்காலத்திலும் பயன்படுத்தலாம்.

இதுவரை பல போட்டிகள் அனுசரணையாளர்களின் நிதி உதவியுடன் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. கணக்குகள் எத்தனை அனுசரைணயாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்ற கேள்வி இன்று பலரிடமும் எழுந்துள்ளது.

பொது நிதியை நல்ல முறையில் கையாள வேண்டும். அமைப்புக்குழு, விழாக்குழு என்று படங்கள் போட்டு விளம்பரங்கள் தேடிக் கொள்வது நிறுத்தப்படவேண்டும். இதன் மூலம் அவர்கள் தமக்கான பிரபல்யத்தை தேடிக்கொள்கிறார்களே தவிர வேறொன்றும் இல்லை.

எனவே எதிர்காலத்தில் பொதுமக்களுடைய பணத்தில் தமக்குக் கௌரவம் தேடுவதை விடுத்து நல்லமுறையில் செலவு செய்து விளையாட்டுத் துறையையும் வீரர்களையும் வளர்த்தெடுக்கச் செயற்படுவோமாக. ✱

**விண்ணன்**

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.2

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி - தென்மராட்சி மாவட்டக் கிளையின் குருளைச் சாரணர், சாரணர் ஆகியோருக்கான விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

குருளைச் சாரணர் பிரிவில் 7 வயதுக்கும் 9 வயதுக்கும் இடைப்பட்டவர்கள், 10 வயதுக்கும் 11 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் ஆகியோருக்கும் சாரணர் பிரிவில் 12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்டவர்கள், 16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் ஆகியோருக்கும் தனித்தனி பிரிவாகப் போட்டிகள் நடத்தப்படுமென் மாவட்டச் சாரணர் ஆணையாளர் செ. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (1-207)

✱ ✱ ✱

வலி.வடக்கு,ஓக.2

யாழ்.மாவட்ட தாச்சி சங்கம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

13ஆவது ஆண்டாக நடத்தப்படும் இச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 14 முன்னணிக் கழகங்கள் கலந்து கொள்கின்றன. போக்குவரத்துக் கஷ்டம் காரணமாகத் தென்மராட்சிப் பிரதேச கழகங்கள் கலந்துகொள்ளவில்லை.

இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் லீக் முறையில் இடம்பெறவுள்ளன. முதல் சுற்றில் 42 போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 10ஆம் திகதி நிறைவுபெறவுள்ளன. (1-86)

## ஒலிம்பிக் நினைவுகள் 4

*இரண்டாவது ஒலிம்பிக் போட்டி 1990இல் பிரான்ஸ் தலைநகர் பரீஸில் நடைபெற்றது. மே 14 முதல் ஒக்டோபர் 22 ஆம் திகதி வரை இப்போட்டி, தொடக்கம் மற்றும் நிறைவு நாள் நிகழ்ச்சிகள் இல்லாமல் முடிவுற்றது.*

*24 நாடுகள் சேர்ந்த 997 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். முதல்முறையாக மகளிர் கலந்து கொண்டனர்.*

*மொத்தம் 19 விளையாட்டுகளில் 95 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டியில் வென்ற பெரும்பாலான வீரர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமைகளில் போட்டிகள் நடத்துவதற்கு அமெரிக்க வீரர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.*

**இன்னும் 6 நாள்களே எஞ்சியுள்ளன......**

*சில வித்தியாசமான போட்டிகள் இந்த ஆண்டில் மட்டுமே நடத்தப்பட்டன. குதிரைச் சவாரியில் நீளம் தாண்டுதல் - உயரம் தாண்டுதல், தடை நீச்சல், இரண்டு நாள் கிரிக்கெட், உயிருள்ள புறாவை சுடுதல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.*

*ஆல்வின் கிராயென்ஸ்லெய்ன் என்பவர் 60 மீற்றர், 110 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் தடை ஓட்டம், நீளம் தாண்டுதல் ஆகியவற்றில் தங்கப் பதக்கங்களை வென்றார். ஒரே போட்டியில் தனிநபர் பிரிவில் 4 தங்கங்களை வென்ற இவரது சாதனை இதுவரை முறியடிக்கப்படவில்லை.*

*நீளம் தாண்டுதல் போட்டி ஒரு ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டதால் மெயர் பிரின்ஸ்டெய்ன் என்பவரைப் பங்கேற்க அவரது பல்கலைக்கழகம் அனுமதிக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த பிரின்ஸ்டெய்ன, போட்டியில் வென்ற கிராயென்ஸ்லெய்ன் முகத்தில் அறைந்தார் என்ற குற்றச்சாட்டு அப்போது எழுந்தது.*

*டெனிஸ் ஒற்றையர் பட்டத்தை சார்லோட் கூப்பர் கைப்பற்றினார். இதன் மூலம் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் பெண்மணி என்ற பெருமையை அவர் பெற்றார். கூப்பர், கலப்பு இரட்டையர் போட்டியிலும் தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.*

*மரதன் போட்டியில் முதலிடம் பிடித்த பிரெஞ்சு வீரர்கள் குறுக்கு வழியில் வந்தனர் என அமெரிக்க வீரர்கள் மூவர் குற்றம் சாட்டினார். பிரெஞ்சு வீரர்களின் கால்களில் சேறு இல்லை என்பதை தங்களது வாதத்துக்கு ஆதாரமாக அவர்கள் தெரிவித்தனர். இவ்வாறு பல சர்ச்சைகளுக்கு மத்தியில் இரண்டாவது ஒலிம்பிக் போட்டி வெற்றிகரமாக நிறைவுபெற்றிருந்தது.*

ஒலிம்பிக்கில் தனிநபர் போட்டியில் ஒரு பதக்கம் வெல்லவே இந்தியா போராடி வருகிறது. ஆனால், நவீன ஒலிம்பிக்கின் தொடக்கத்திலேயே 2 பதக்கங்களைக் கைப்பற்றி இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளார் நார்மன் பிரிட்சார்ட்.

பரீஸில் 1900 இல் நடைபெற்ற போட்டியில் 200 மீற்றர் ஓட்டம் மற்றும் 200 மீற்றர் தடை ஓட்டம் ஆகியவற்றில் வெள்ளிப் பதக்கங்கள் வென்றார் அவர்.

110 மீற்றர் தடை ஓட்டத்தில் 5 ஆவது இடம்பிடித்தார். 60 மீற்றர் மற்றும் 100 மீற்றர் ஓட்டப்போட்டிகளிலும் பங்கேற்றார். ஆனால் இறுதிச் சுற்றுக்கு முன்னேற முடியவில்லை. 200 மீற்றர் தடை ஓட்டத்தில் இரண்டாவது சுற்றின்போது, உலக சாதனை படைத்தார். ஆனால், இறுதிச்சுற்றில் அவரது சாதனையை கிராயென்ஸ் லெய்ன் முறியடித்து தங்கம் வென்றார்.

பெங்கால் மாகாண 100 மீற்றர் ஓட்டத்தில் 1894 முதல் 1900 வரை தொடர்ந்து 7 ஆண்டுகள் பிரிசார்ட் முதலிடம் பிடித்தார்.

1905இல் இங்கிலாந்தில் சிறிது காலம் தங்கியிருந்துவிட்டு அமெரிக்கா சென்றார். நார்மன் டிரெவர் என்ற பெயரில் நடிகரானார். சில ஹொலிவூட் படங்களிலும் நடித்தார். ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் மற்றும் முதல் ஆசியர் என்ற பெருமையைப் பெற்ற பிரிட்சார்ட், 1877 ஜூன் 23இல் பிரிட்டிஷ் தம்பதிக்கு கொல்கத்தாவில் பிறந்தவர். 1905இல் இங்கிலாந்து சென்று குடியேறியவர்.

2005இல் உலக தடகளச் சங்கம் வெளியிட்ட புள்ளிவிவர அறிக்கையில் பிரிட்சார்ட் பிரிட்டன் சார்பில் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றிருந்தார் எனக் குறிப்பிட்டுள்ளது. ஆனால், அவர் இந்தியாவின் சார்பில் பங்கேற்றிருந்தார் என இந்திய ஒலிம்பிக் சங்கம் குறிப்பிட்டுவருகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படங்கள் தரும் பதிவுகள்.....



யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் லான்ட் ஒ லேக்ஸ் பாற்பொருள் அபிவிருத்தி லங்கா நிறுவனமும் இணைந்து நடத்திய யாழ்.கோவின் பாற்பொருள் தயாரிப்புக்களின் மீள் அறிமுக நிகழ்வில் மக்கள் தமக்குத் தேவையான பாற்பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது எடுக்கப்பட்ட படம். (111)



கரவெட்டிப் பிரதேச சமுர்த்தி 'சிப்தொற' புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. சமுர்த்தி முகாமையாளர் எஸ்.குகதாசன் புலமைப் பரிசில் பெற்ற மாணவிக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: சுந்தா)



வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு அண்மையில் கணனி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

வித்தியாலய பழைய மாணவன் திருஞானசம்பந்தர் கணாளன் என்பவர் பாடசாலை அபிவிருத்திச்சபை செயலாளர் முருகேசு ஜெயராசாவிடம் கணனியைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் சு.தர்மலிங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள் ஆகியோரும் காணப்படுகின்றனர். (தென்னவன்)



யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம், சுன்னாகம் றோட்டறக்ட் கழகம் என்பவை இணைந்து கந்தரோடை துர்க்கா முன்பள்ளிக்குத் தளபாடங்கள் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.



நயினாதீவு வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வங்கிக் கட்டடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் யாழ்.கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் கட்டடத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட கடற்படை அதிகாரிகளையும் திணைக்கள அதிகாரிகளையும் படங்களில் காணலாம். (51)



யாழ்.கல்வி வலயத்தின் விஷேட கல்விப் பிரிவினர் விஷேட தேவையுடைய மாணவர்களை பெற்றோர்களுடன் உள்ளக சுற்றுலா ஒன்றுக்கு அழைத்து சென்றனர். மாணவர்கள் பூங்கனிச்சோலையில் மகிழ்ச்சியுடன் விளையாடுகின்றனர். (படம்: நாயகன்)



குளமங்கால் றோ.க.வித்தியாலய சாரணர் மாணவர்களுக்கு அண்மையில் சின்னம் சூட்டும் விழா நடைபெற்றது.

சின்னம் சூட்டப்பட்ட மாணவர்கள், வித்தியாலய அதிபர் செல்வி அ.றோ.ஜெயநாயகி, பிரதி அதிபர் ப.அருள்ராஜ், சாரணப் பொறுப்பசிரியர் சி.சிவலோகநாதன் ஆகியோருடன் எடுத்துக்கொண்ட படம்.



மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையின் 72ஆவது நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் 1959ஆம் ஆண்டு முதல் 1971ஆம் ஆண்டு வரை அந்த வைத்தியசாலையில் பணியாற்றிவந்த வைத்திய கலாநிதி எஸ்.சற்குணராசா நினைவாக அமைக்கப்பட்ட விடுதியைத் திறந்து வைத்து அவரது உருவப்படத்தையும் திரைநீக்கம் செய்து வைக்கின்றார் வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திர[illegible] (படம்: மு.சந்திரகுமார்)



தொண்டைமானாறு கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை நடத்திய கண்காட்சி நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம். (படம்: சுந்தா)



சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் சப்பாத்துகளை வழங்கியது. சப்பாத்துகள் பெற்றுக்கொண்ட மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் நிற்கின்றனர். (323)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருதிக்கொடையாளர் கௌரவிப்பு விழா

## சிறப்பு மலர் - 02.08.2008



தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்குத் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்து, பல உயிர்கள் காப்பாற்றப் படுவதற்குக் காரணமாக இருந்து, சாதனை படைத்து, சமூகத்தின் வீரர்களாகத் திகழும் மதிப்புக்குரிய குருதிக் கொடையாளர்களின் அர்ப்பணிப்பு நிறைந்த சேவையை பாராட்டும் முகமாக பல பெரியவர்களுடைய வாழ்த்துச் செய்திகளுடன், இச் சிறப்புமலர் வெளிவருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இரத்த வங்கி,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

### அருளாசிச் செய்தி



மக்களின் உயிர்காக்கும் இரத்ததானம் செய்யும் அன்பு உள்ளங்களை வாழ்த்திக் கௌரவிப்பதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். தானங்களில் உயர்ந்ததாகக் கூறப்படும் இரத்ததானத்தை வழங்கும் ஒவ்வொருவரும் ஒரு உயிரைக் காப்பதோடு இறைவனுடைய அன்பையும் பெறுகின்றான். யாழ். போதனா வைத்தியசாலையில் தொடர்ச்சியாக குருதி வழங்கிக்கொண்டிருக்கும் கொடையாளர்கள் ஒவ்வொருவரையும் இறைவன் ஆசீர்வதிக்கின்றான். அனைவருக்கும் இறைவனுடைய ஆசி கிடைப்பதாக.

வழங்குக தானம் வளமுடன் வாழ!
''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்,
*இரண்டாவது குருமஹாசந்நிதானம்.*

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



இன்று இங்கு கௌரவம் பெறும் ஒவ்வொருவருக்கும் இரத்த சம்பந்தமான உறவுகள் யாழ். மாவட்டத்தின் முழுமையிலும் பரந்து வாழ்கின்றனர். இவர்களது இரத்த பாசம் மாவட்ட ரீதியில் பரந்து விரிந்தமை பாராட்டிற்கும் மகிழ்ச்சிக்குமுரியதொரு விடயமாகும்.

இன, மத, சாதி வேறுபாடுகளைக் கடந்து நால்வகை இரத்தமும் தேவைக்கேற்ப தேவைப்படுவோருக்கு பயன்படுத்தப்பட்டதென்றால் அதற்குக் காரணமாயமைந்த யாழ். போதனா வைத்தியசாலையில் செயற்பட்டு வரும் குருதி வங்கியின் செயற்பாடு பெருமைப்படத்தக்கதெனலாம்.

யாழ் மாவட்டத்தின் இன்றைய சூழ்நிலையில் தம் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து அடுத்தவர் ஆரோக்கியத்துக்காக தம் குருதியை வழங்கும் கொடையாளிகளின் சமூக மனப்பான்மை போற்றுதற்குரியது.

இவ்வகையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மாவட்ட மக்களுக்கு ஆற்றிவரும் பணி மறக்கவோ மறைக்கவோ முடியாதது. இவ் வைத்தியசாலையின் அனைத்துத் தரப்பினரும் குருதிக் கொடையாளிகளும், பயன் பெற்றோரும் நீடூழி வாழ நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

க.கணேஷ், அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.

### தானங்களில் உயர்ந்த தானம்



தானங்களில் உயர்ந்த தானம் இரத்ததானம். ஓர் உயிரைக் காக்கும் உன்னதபணி. அதிலும் தாமாக முன்வந்து கிரமமாக இப்புனித பணியில் ஈடுபட்டிருக்கும் தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். இவர்கள் சமூகத்திலுள்ள ஏனையோருக்கு முன்னுதாரணமாக திகழ்பவர்கள். இவர்கள் மூலம் யாழ். மாவட்டத்தில் இரத்ததானம் பற்றிய சிறந்த விழிப்புணர்வு ஏற்படவேண்டும். இப்புனிதப் பட்டியலில் இன்னும் பலர் தம்மை இணைத்துக் கொள்ளவேண்டும். இந்த மண்ணில் ஓர் உயிரேனும் இரத்தமின்மையால் மடியக் கூடாது. இந்த இலட்சியப் பயணத்தில் இணைந்து இன்று கௌரவிக்கப்படும் தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் அனைவருக்கும் சுகாதாரத் திணைக்களத்தின் நன்றிகளையும், பாராட்டுகளையும் தலைவணங்கிச் சமர்ப்பிக்கின்றேன்.

''ஓர் உயிர் இன்னோர் உயிரைக் காக்கும்
ஒப்பற்ற பணி தொடரட்டும்''

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்திய பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

### மனித குல மாணிக்கங்கள்



மனிதப் பண்புகள் சிதைந்து, கயமைகள் பெருகியுள்ள சமகால உலகில் யுத்தம், இயற்கை அழிவு போன்ற கோர நிகழ்வுகளால் உலக மனித சமுதாயம் அல்லலுற்றுக்கொண்டிருக்கும் வேளையில் தனதுயிரிலும் மேலாக பிற உயிர்களின் காப்புக்காக எவ்வித பிரதிபலனுமின்றி தன்னார்வமாக அர்ப்பணிப்புடன் தன் உயிரிற்காகப் போராடுபவனுக்கு தாராள சிந்தையுடன் செயற்படும் மனித குல மாணிக்கங்களிற்காக இச்சந்தர்ப்பத்தில் தலைவணங்கி எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஜீவகாருண்யம், அன்பு, அர்ப்பணிப்பு என மதங்கள் கூறும் கொள்கைகளின் இலக்கணம் நீங்கள். இன்று உங்களைக் கௌரவிக்கின்ற யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

- B.A அருமைநாயகம், வடமாகாண அலுவலகம்,
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

### இரத்த வங்கிக்கு உயிரோட்டம் கொடுப்பவர்கள்



புனிதமான தானமாக இக்குருதித்தானத்தை அளித்து எங்கள் வைத்தியசாலையின் இரத்த வங்கியின் உயிரோட்டத்தினை கொடுத்துக் கொண்டிருப்பவர்களாகிய உங்களை பணிப்பாளர் என்ற வகையில் கௌரவித்து ஆசி கூறுவது எனது தார்மீகக் கடமையாகும்.

இரத்த தானத்தின் அவசியத்தினையும் அதன் விளைவுகளையும் அறிந்து தன்னிச்சையாக எதுவித கட்டாயப்படுத்தலும் இன்றி காருண்ய சிந்தனையுடன் மனித குலத்துக்குச் செய்யும் கடமை உணர்ச்சியினை இத்தருணத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும் உங்களின் முன்மாதிரியைப் பின்பற்றி பலருக்கு எடுத் துக்காட்டாக விளங்கும் காதாநாயகர்களாகிய உங்கள் வாழ்வு இறை வனின் அருளால் என்றும் நலமுடன் இருக்கவேண்டுமென வாழ்த்து கின்றேன்.

இப்படியான நோக்குகள் கொண்ட மனித சமுதாயத்தை கௌரவிப்பது தற்போது அவசரமானதும் அவசியமானதும் என கருதி இம் மலரில் உங்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வைத்திய கலாநிதி A.E.ஞானசோதி, பணிப்பாளர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

### தானத்தில் நிகரற்றது



தன்னிடம் இருப்பதைப் பிறர் நலனுக்காகக் கொடுப்பதை தானம் என்றும், கொடை என்றும் சொல்வார்கள். குருதிக்கொடையை எண்ணற்ற பலரின் உயிர் காக்கும் ஒரு சஞ்சீவியாகத்தான் அதை நாம் பார்க்க வேண்டும். தன் இரத்தத்தில் ஒரு சிறு பகுதியைக் கொடையாக அளிப்பதன் மூலம் எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றக் காரணிகளாக விளங்கும் குருதிக் கொடையாளிகளின் தியாக சிந்தனை போற்றுதற்குரியது. தன்னலமில்லாமல் தானாகவே மனமுவந்து அளிக்கப்படும் இக்குருதிக்கொடையானது விலை மதிப்பில்லாத எத்தனை உயிர்களைக் காப்பாற்றுகின்றது என யாருக்குத் தெரியும்? எம்மைப் படைப்பவன் கூடக் குருதிக் கொடையாளிக்கு உதவுகிறான். எப்படித் தெரியுமா? ஒருவன் தன் இரத்தத்தில் ஒரு பகுதியைக் கொடையாக அளிக்கும்போது அவன் உடலில் புது இரத்தம் பெருகுவதோடு நோய்களும் விலகுகின்றன. இந்தத் தத்துவம் புரியாதவர்களே குருதிக்கொடை செய்யத் தயங்குகின்றனர். பல முறை குருதிக் கொடை செய்தவர்களைக் கௌரவிப்பது மேலும் பலர் இக்கொடையில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும். தன்னார்வத்தோடு குருதிக் கொடை செய்த சகலருக்கும் இறையாசியும் நல்ல உடல் ஆரோக்கியமும் கிட்டவேண்டும் என உளமார வாழ்த்துகின்றேன்.

Rtn.K.Balasubramaniam,
தலைவர், ரோட்டரிக் கழகம், யாழ்ப்பாணம்.

### உயிர்காக்கும் கொடை



உணவு, உடை, உறையுள் என்று பலவிதமான கொடைகளை இரக்க சிந்தை கொண்ட பலரும் இவ்வுலகில் செய்து கொண்டு வருவதை நாம் அறிவோம். ஆனால் எமது உடலின் ஜீவ ஊற்றான குருதியிலிருந்து ஒரு சிறு அளவை இன்னொரு உயிருக்கு அவர் உயிரைக் காப்பதற்காக அளிக்கும் கொடை உலகிலே போற்றுதற்குரியதும், சிறந்ததும், சாதாரண வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டதுமாகும்.

இன்று கூடக் குருதிக் கொடை அளிப்பதில் பலரும் தயக்கம் காட்டும் வேளையில் தானாக மனமுவந்து தன்னலம் கருதாது இக்கொடையைப் பலமுறை செய்த, செய்யப்போகும் இந்த ஒப்பற்ற வள்ளல்களைக் கௌரவித்து விழா எடுப்பது சாலப் பொருத்தமான ஒரு செயல். இந்தத் தன்னார்வம் கொண்ட ஒப்பற்ற கொடையாளிகளை நான் மனதார வாழ்த்துவதோடு அவர்களுக்குச் சகல வளங்களும் பெருகவேண்டும் எனவும் இறையாசி கிடைக்கவேண்டும் எனவும் வேண்டுகின்றேன்.

Rtn PP E.சரவணபவன், PHF ரோட்டரிக் கழகம், யாழ்ப்பாணம்.

### யாழ் ஆயரின் ஆசிச்செய்தி



யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பகுதியினர் குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழாவை ஒழுங்கு செய்துள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ். குடாவிற்கான போக்குவரத்துப் பாதையின்றி மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக நோயாளிகள் போதிய மருத்துவ வசதியின்றி வேதனையடைவதைக் காணக்கூடியதாக உள்ளது. மருத்துவமனைகளுக்குத் தேவையான குருதிப் பற்றாக்குறை அடிக்கடி ஏற்படுவதை பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். இந்நிலையில் எம் குடாநாட்டு மக்களில் சிலர் பிறர் அன்புப் பணியாக தமது குருதியைத் தாமாக தானம் செய்ய வருவது பாராட்டப்பட வேண்டியது. ''தம் நண்பனுக்காக தம் உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு வேறு இல்லை'' என உரைத்த எம் பெருமான் இயேசுவின் வார்த்தைக்கு ஏற்பதாமாக குறிப்பிட்டகால இடைவெளியில் குருதிக்கொடை வழங்குகின்றவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

ஆகவே, இந்நன்நாளில் இவர்களைப் பாராட்டி கௌரவிப்பதுடன் இவர்கள் போன்ற பலர் எம் சமூகத்தில் தோன்ற என் ஆசிகளைக் கூறுவதுடன் ஏற்பாட்டாளர்களைப் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

அதி.வண.இ.தோமஸ் சவுந்தரநாயகம், யாழ் ஆயர்.

### சமூகம் பெருமை பெறுகிறது



மானுடத்தின் மேன்மை காக்கும் குருதிக்கொடையாளர்களினால் எமது சமூகம் பெருமை பெறுகின்றது.

வைத்திய சேவையின் மகத்துவம் காக்கும் எங்கள் இரத்த வங்கியின் அயராப் பணிகளினால் பலரின் வாழ்வு காக்கப்படுகின்றது.

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர்- அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' எனும் உயர் வாக்குக்கு இலக்கணமான இவர்களைப் போற்றுதல் எம்கடன். இவர்கள் வாழ்வில் நல்லனவெல்லாம் நிறைந்திட எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன், துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### தலை சிறந்த தானம்



தானங்களிற் சிறந்தது இரத்ததானம். இரத்ததானம் வழங்குவதால் பல உயிர்களைக் காப்பாற்றிய மனநிறைவு இருக்கும். தாராள மனதுள்ளவர்கள் யாவரும் உவந்தளிக்கும் ஒரு தானமாக கருதப்படுகிறது. தட்டுப்பாடான குருதி இனமுள்ளவர்கள் இதனை வழங்குவது ஏற்றது.

இச்சிறந்த தொண்டினைச் செய்யும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிற் கடமையாற்றும் வைத்தியர்களும் அனைத்து உத்தியோகத்தர்களும் பாராட்டுக்குரியவர்கள். இவர்களுக்கும் குருதி வழங்குபவர்களுக்கும், குருதி பெறுபவர்களின் நல்லாசியும் இறைவனின் நல்லாசியும் என்றும் உண்டு.

வே.தி.செல்வரத்தினம்,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்.மாவட்டம்.

### மக்கள் சேவையில் இரத்ததானம்



''இரத்ததானம்'' என்பது ''அன்ன தானத்திலும்'' சிறந்த ஒரு முக்கியம் வாய்ந்த தானமாகும். அன்னம் அடுத்த வீட்டிலேயென்றாலும் தருவார்கள். ஆனால், இரத்தம் மனிதனிலிருந்தே பெற்றுக்கொள்ளவேண்டும். இரத்தம் செயற்கையாகப் பெறமுடியாதது.

இதயம் இயங்குவதற்கு ஒரு அளவிலான இரத்தம் உடம்பில் இருக்க வேண்டும். இரத்தம் குறையும் போது இதயம் இயங்க மறுக்கின்றது.

இதனை மனதில் கொண்டு தான் உலகளாவிய முறையில் செஞ்சிலுவை சங்கம் இரத்தானத்தை தனது முக்கிய, பணியாகக் கருதுகின்றது. கொழும்புத் தலைமையகத்திலும், அதன் 26 மாவட்ட கிளையிலும் இரத்ததானம் முக்கிய அதிமுக்கிய இடத்தைப் பெறுகின்றது.

யாழ்.கிளையில் உள்ள 15 பிரிவுகளிலும் உள்ள எமது பிரிவினர் - அங்குள்ள இளைஞர்கள், பணியாளர்கள், உறுப்பினர்கள், தொண்டர்கள் ஆகியோர் இரத்தானம் செய்ய முன் வருகிறார்கள். தேவையான போது, அல்லது ''குருதிக் கொடை நாட்களில்'' இரத்ததானம் செய்யும் முக்கியத்துவத்தை உணர்ந்து மக்கள் சேவையில் இரத்ததானம் மூலம் மக்களுக்கு அளிக்கவுள்ளனர்.

பேராசிரியர். வி.கே.கணேசலிங்கம், கௌரவ தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை.

**Maniiyam Impex**
75,(121A) Kasthuriyar Rd, Jaffna, 021-2222819

**PC Park(Pvt) Ltd**
633 KKS Rd, Jaffna, SriLanka, 021-2229581

**UNIT** all of your computer needs
347, KKS Rd, Manohara Theatre Junction, Jaffna, SriLanka, 021-4590720

**Marsha computers**
Kannathiddy Junction, Jaffna

**R.V.G Medicals**
594, Hospital Rd, Jaffna.

**New Ragams** Padducholai
7,8,24 Modern Market (inside)Jaffna, 021-2227179

**Sivakanesan textiles**
41, Grand Bazaar, Jaffna, 021-2222063

**Dress Point**
23 Grand Bazaar,Jaffna, 021-2226833

**Holy Cross Health Centre**
769, Beach Rd, Jaffna, 021-2222512

**Central Nursing Home (Pvt) Ltd**
350, Palaly Rd, Jaffna, 021-2222263

**Durdans Laboratory**
514/1,Hospital Rd, Jaffna, 021-2229727

**HNB Assurance**
Stanly Rd, Jaffna, 021-2226016

**HNB** Your Partner in Progress
Nelliyady

**Seematy Textiles**
Power House Rd, Jaffna

**Valvai Ontriam**
Valvettithurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடுபட்டுக் காயமுற்ற இளைஞன் காலமானார்

யாழ்ப்பாணம், ஒக.2

பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆயுததாரிகளின் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞன் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் காலை மரணமானார்.

லூர்துமாதா கோயிலடி, தும்பளையைச் சேர்ந்த ரி. பாலகிருஸ்ணன் (வயது 19) என்ற இளைஞனே மரணமானவராவார். (1-25)

## சுதந்திரபுர கிராமத்தின் 75 குடும்பங்களுக்கு கிடுகுகள், தூண்கள் உதவி

நவாலி, ஒக.2

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுதந்திரபுர கிராமத்தின் 75 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளைப் புனரமைப்பதற்கென கிடுகுகள், பனைமரத் தூண்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

யாழ். சமூக செயற்பாட்டு மையம் அனர்த்த முனைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த உதவியை வழங்கியுள்ளது.

மேற்படி உபகரணங்களை சம்பிரதாய பூர்வமாக கையளிக்கும் நிகழ்வில் நிறுவனத்தின் இணைப்பாளர் என். சுகிர்தராஜ் மற்றும் நிகழ்ச்சித்திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். (202-100)


## தற்காலிக வருகை விரிவுரையாளர்

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் சித்த ஆயுள்வேத பாடங்களை சேவை மனப்பாங்குடன் கற்பிக்கக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

12.08.2008 இற்கு முன்னதாக தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
வட-இலங்கை சுதேச வைத்தியசபை,
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(76819)

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
Assembling · Upgrading · Troubleshooting · Fault finding · Repairing · Servicing · Software Installation · Configuring · Networking
Course Fee : 2000/=

**Diploma in Video Editing**
முன்னணி Video Mixing Software களுடன்
Adobe Photoshop · Adobe Premier · Cool3D Studio · Pinnacle Studio · VCD Cutter · Capturing
Course Fee : 3000/=

**Diploma in Graphic Designing**
Adobe Photoshop · Corel DRAW · Cool3D Studio · Micro Media Flash
Course Fee : 2000/=

பிரபல கணணிக்கணக்கியல் மென்பொருள்.........
**Tally** செய்முறைப்பயிற்சிகளுடன் கம்பனிகணக்குகளையும் உள்ளடக்கி..

வகுப்புக்கள் ஆரம்பம் : 04/08/2008 09.00AM


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நாகமுத்து நாகலிங்கம்**

தோற்றம் 17.07.1932 — மறைவு 12.08.2007

திதி: ஆடிஅமாவாசை

ஈராறு மாதங்கள் சென்றாலும்- ஐயா
எம் ஈர விழிகள் இன்னும் காயவில்லை
ஆடி அமாவாசை நாளில் உம்மை
காலமெல்லாம் நாம் நினைப்போம்.

"லீலா வாசம்",
வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டை.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(இ/553987)

## ஆண்டுகள் 28இல் ....

மலர்வு 14 11 1935 — உதிர்வு 02 08 1980



**அமரர் சுவாம்பிள்ளை யோசவ் அன்ரன்**

(பொலிஸ் சாஜன் — மாதகல்)

எங்கள் ஆதாரமே அப்பா!
உங்கள் ஆவி அடங்கிய
அதே சனியில்...... மீண்டும் உம்பாதம்
வணங்கிப் பணிகின்றோம்.

என்றும் உங்கள் நினைவிலும், நிழலிலும் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (76786)

## ஆடிப்பூரத் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக.2

மாவிட்டபுரம் வீணியவரை இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடை பெறவுள்ளது.

விசேட பூசை வழிபாடுகள், அபிஷேகம் என்பன இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும்.

காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை ஆலயத்திற்கு அடியார்கள் சென்று வழிபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களை நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னர் தெல்லிப்பழை சோதனைச் சாவடிக்கு வருகைதருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அன்று முற்பகல் 10 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட சகடை வெள்ளோட்டமும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

* * *

கன்னாதிட்டி காளியம்பாள் ஆலய ஆடிப் பூரத் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு ஸ்நபனா பிஷேகம் நடைபெறும். முற்பகல் 10 மணிக்கு அம்பிகைக்குச் சிறப்பு அபிஷேகம் இடம் பெற்றுத் தொடர்ந்து ஆடிப்பூரத் திருவிழா இடம் பெறும்.

* * *

யாழ்ப்பாணம், ஒக.2

கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8மணி தொடக்கம் ஆடிப்பூரத் திருவிழா இடம் பெறவுள்ளது.

அம்பாளுக்கு அபிஷேகம், திருமஞ்சன நீராட்டல் என்பன நடைபெற்று ருது சாந்தி இடம்பெறும். (203)

* * *

அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலய ஆடிப்பூரத் திருவிழா நாளைமறு தினம் திங்கட்கிழமை காலை நடைபெற வுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் பூந்தண்டிகையில் வீதியுலா வருவார். (203)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஒக.2

நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 9மணிக்கு சுவாமி தேரேறி வீதியுலா வருவார்.

மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (203)

* * *

நல்லூர், ஒக.2

திருநெல்வேலி நீலாயதாஷி காயாரோகணேஸ்வர சுவாமிகள் ஆலய அம்பாள் உற்சவ தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும். மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (203-111)

* * *

யாழ்ப்பாணம், ஒக.2

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நவசண்டி ஹோம யாகம் இன்று தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறும். (203-207)

* * *

யாழ்ப்பாணம், ஒக.2

அளவெட்டி தெற்கு, வெளிவயல் முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா எதிர் வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

## சட்டவிரோத மின் பாவனையாளர்கள் 22 பேருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஒக.2

கோப்பாய், இருபாலைப் பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுவந்த 22 பேருக்கு யாழ்.நீதிமன்றம் ஒருலட்சத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

கடந்த புதன்கிழமை குளப்பிட்டி மின்சாரசபை ஊழியர்களும் பொலிஸாரும் இணைந்து நடத்திய சோதனையின் போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டில் 22பேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். நீதிமன்ற நீதிபதி இ.வசந்தசேனன் முன்னிலையில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் 22 பேருக்கும் ஒருலட்சத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து எச்சரித்து விடுதலை செய்தார். (203)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 10.05.1924

உதிர்வு 03.07.2008

**திருமதி பொன்னுத்துரை இரத்தினம்**

அன்பாக எமைப் பேணி வளர்த்தீர்கள்!
ஆதரவாய் இருந்து காத்தீர்கள்!
பாசத்தை உணவுடன் சேர்த்தூட்டி
பார்போற்ற எமை ஆளாக்கினீர்கள்
எத்துன்பம் நோய் வந்தபோதும்
எதிர்த்து நின்று மகிழ்வுடனே வாழ்ந்தீர்கள்
அம்மா! உங்களை நாம் தொழுகின்றோம்
உங்கள் நினைவை என்றும் மறவோம்.

முருகேசபண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு.

குடும்பத்தினர்.

(இ/553975)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 20.12.1937

மறைவு 01.07.2008

**அமரர் இராசா நடராசா**

(இளைப்பாறிய தபாலதிபர்)

*01.07.2008* அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (*02.08.2008*) சனிக்கிழமை பழைய வீதி, கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்வதுடன் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு. (76796)

குடும்பத்தினர்.


## ஒப்புநோக்குநர்கள் தேவை
## Proof Readers Wanted

தமிழ் - ஆங்கிலமொழி அறிவு உடைய 20 - 30 வயதுக்கு இடைப்பட்ட யாழ் மாநகரசபை எல்லைக்குள் அல்லது யாழ் மாநகர எல்லைக்கு அண்மித்த தூரத்தில் நிரந்தரமாக வசிக்கும் இரு பாலரும் 04,05.08.2008 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 மணிமுதல் பி.ப.4.00 மணிவரை நேரில் வரவும்.

பாரதி பதிப்பகம், 430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழகத்தில் பெருகி வரும் ஈழத்தமிழர் ஆதரவுப் போக்கு

ஈழத் தமிழருக்கு ஆதரவான எழுச்சி தமிழகத்தில் ஏற்பட்டு வருவதைத் தனது கருத்துக் கணிப்பு விவரங்களுடன் வெளிப்படுத்தியிருக்கின்றது 'ஆனந்த விகடன்' சஞ்சிகை.

தமிழக மக்களின் தமிழின உணர்வுகளைப் புறக் கணித்து - அல்லது அதனைக் கவனத்திலேயே எடுக் காமல் - நடந்து கொள்வதுதான் புதுடில்லி அரசின் போக்காகவும் இருந்து வருகின்றது.

இப்போதும் கூட, தமிழகத்தில் ஈழத் தமிழருக்கு ஆதரவான எண்ணப் போக்கு தீவிரப்பட்டு வருகையில் அதைக் கவனத்தில் எடுக்காமலேயே புதுடில்லி காய் நகர்த்தல்களைச் செய்கிறது.

கொழும்பு 'சார்க்' மாநாட்டை ஒட்டிப் புதிய கூட்டுப் பட்டயம் ஒன்றை இந்தியா பிரேரித்து வெளிப் படுத்திக் காய் நகர்த்துகின்றது.

'பரஸ்பர சட்ட உதவி உடன்பாடு' என்ற இந்த ஒப்பந்தத்தின் கீழ், கைது செய்யப்படும் 'பயங்கரவாதி களை' சம்பந்தப்பட்ட நாட்டிடம் ஒப்படைப்பது உட்படப் பல விடயங்கள் உள்ளடக்கப்படவிருக்கின்றன என்று ஆரம்பக்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது உண்மையானால் ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக இருக்கும் விடுதலைப் புலிகளை மடக்குவதற்கு இலங்கையோடு சேர்ந்து புதுடில்லி விரிக்கும் வலையாகவே இது கொள்ளப்பட வேண்டும்.

தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவான எண்ணப் போக்குத் தீவிரம் பெற்று வருகையிலேயே புலிகளை மடக்குவதற்கான தனது கைங்கரியத்தை மறுபுறத்தில் புதுடில்லி தீவிரப்படுத்துகின்றது.

இது தமிழகத்தை எள்ளி நகையாடும் புதுடில்லி ஆட்சியாளரின் திமிர்த்தனமேயன்றி வேறில்லை.

இன்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி போன்றோரின் தயவில்தான் புதுடில்லியில் மத்திய அரசே தாக்குப்பிடித்து நிற்கின்றது. அப்படி இருக்கையில் ஈழத் தமிழர் விடயத்தில் மட்டும் தமிழக மக்களையும், தமிழக மாநில அரசுத் தலைமையையும் புதுடில்லி துச்சமென மதித்து, உதாசீனப்படுத்தி நிற்பது பொறுத்துக் கொள்ளத்தக்கது அல்ல.

தமிழகத்தில் உள்ள மக்களில் 55 வீதத்தினர் எப்போதும் தாங்கள் புலிகளை ஆதரிக்கின்றனர் என்பதை ஆனந்த விகடனின் கருத்துக் கணிப்பு மூலம் வெளிப் படுத்தியிருக்கின்றார்கள்.

தமிழக மக்களில் 28 வீதத்தினர் மட்டுமே புலிகள் மீதான தடை இந்தியாவில் தொடர வேண்டும் எனக் கருதுகின்றார்கள். சுமார் 48 வீதத்தினர் தடையை நீக்க வேண்டும் என்பதில் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றார்கள்.

ராஜீவ் காந்தி கொலைக்காகப் புலிகளின் தலைவர் கைது செய்யப்படவேண்டும் என்று கூறுபவர்கள் கூட தமிழகத்தில் சுமார் 43 வீதத்தினர்தான். அவர் குற்ற மற்றவர் என்றும், அவரை விட்டு விடலாம் என்றும் கருதுபவர்கள் சுமார் 57 வீதத்தினராவர்.

இப்படி இலங்கையோடு சேர்ந்து காய் நகர்த்தும் புதுடில்லி அரசுத் தலைமை, பிறிதொரு விடயத்தையும் கவனித்து உள்வாங்கிக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

அதனைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனே மீண்டும் தெளிவாகச் சுட்டிக்காட்டி வெளிப்படுத்தியிருக்கின்றார்.

''இலங்கை அரசின் இராஜதந்திர நகர்வுகள் எப்போதுமே இந்திய வெளியுறவுக் கொள்கைக்குப் பாதகமாகவே இருந்து வந்துள்ளன. இந்தியாவுக்கு எதிரான சக்திகளுடனேயே அவர்கள் (இலங்கை அரசுத் தரப்பு) வரலாற்று ரீதியான உறவுகளையும் தொடர்புகளையும் பேணி வருகின்றனர். சிங்களக் கட்சிகளின் இந்தியா தொடர்பான அரசியல் கொள்கைகள் எப்போதுமே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளுக்கு எதிரானவையே. தற்போதைய போர்ச் சூழ்நிலையில் அது உச்சக்கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.'' - என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நடேசன் ஏற்கனவே சுட்டிக்காட்டியமை போல இலங்கை விவகாரத்தில் உண்மையான நண்பன் யார், போலியாக நடிக்கும் எதிரி யார் என்பதைப் புரியாமல் கொழும்பின் வலைக்குள் வீணாக விழுந்து கொண்டிருக்கின்றது புதுடில்லி என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஈழத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் அவர்களுடன் தொப்புள் கொடி உறவுகொண்ட தமிழகத் தமிழரின் கருத்து நிலைப்பாடு என்னவென்பது இப்போது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டு விட்டதால், அதை உள்வாங்கி, அதற்கேற்ப தனது அணுகுமுறையையும் புதுடில்லி மாற்றிக் கொள்வது அவசரமும் அவசியமுமாகும்.

''இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படும் என்பதை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.'' - எனப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் குறிப்பிட்ட அதே கருத்துடன் புதுடில்லியின் கருத்தியல் நிலை மாற்றத்துக்காகக் காத்திருக்கின்றார்கள் ஈழத் தமிழ் மக்கள்.

தமிழகத் தமிழர்களின் கருத்தை உள்வாங்கித் தனது போக்கை மாற்றிக் கொள்ளுமா புதுடில்லி?

# மூதூர் படுகொலைச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தும் பிரெஞ்சு நீதிபதி

கொழும்பு, ஓக.2

மூதூரில்படு கொலை செய்யப்பட்ட தொண்டுப்பணி யாளர்களின் கொலைச் சம்பவம் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கென, பிரெஞ்சு அரசாங்கம், நீதிபதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பட்டினிக்கு எதிரான அமைப்பின் ஊடகத்துறை அதிகாரி லூசிலி குறோஸ்ஜூன் தெரிவித்துள்ளவை வருமாறு:-

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பகுதியில் 2006 ஆம் ஆண்டு பட்டினிக்கு எதிரான அமைப்பைச் சார்ந்த பணியாளர்கள் மீதான படுகொலைகளை விசாரணை செய்வதற்கு பிரான்ஸின் அரச நீதிபதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

கடந்த மாதம் தொடக்க காலப் பகுதியில் இலங்கையை சென்றடைந்த நீதிபதி, அங்கு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். இங்கு மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பான அறிக்கையை அவர் பிரான்ஸ் அரசிற்கு இந்த மாதம் சமர்ப்பிக்கவுள்ளார்.

நீதிபதி பிரான்ஸ் திரும்பிய பின்னர், பிரெஞ்சு அரசு இது தொடர்பில் தனது கூட்டணி நாடுகளுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளதுடன், இந்தக் கலந்துரையாடலின் பின்னர் படுகொலை தொடர்பான அனைத்துலக விசாரணைகள் தேவையா என்பது தொடர்பான முடிவு எடுக்கப்படும்.

பிரான்ஸ் அரசும் பட்டினிக்கு எதிரான அமைப்பும் அடுத்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக நீதிபதியின் அறிக்கையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். மூதூர் படுகொலை தொடர்பாக விரைவான நடவடிக்கை எடுப்பதாகப் பிரான்ஸ் அரசு எமது அமைப்புக்கு உறுதி அளித்துள்ளது - என்றார்.

இதனிடையே பிரான்ஸ் நாட்டு நீதிபதி மூதூர் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதை இலங்கைக்கான பிரஞ்சு தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது. (சி)

# நேபாள பிரதமர் தலைமையில் பத்துப்பேர் கொழும்பு வந்தனர்

## சார்க்கிற்கு வருகைதந்த முதல் தலைவர்

கொழும்பு, ஓக.2

சார்க் அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேபாள நாட்டின் பிரதமர் பிரசாத் கொய்ராலா வியாழக்கிழமை பிற்பகல் கொழும்பு வந்தடைந்தார்.

சார்க் நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டுக்கு இலங்கைக்கு முதலாவதாக வந்துசேர்ந்த அரச தலைவர் நேபாளப் பிரதமர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் 10 பேர் அடங்கிய விசேட குழு ஒன்றுடன் வருகை தந்திருக்கும் நேபாளப் பிரதமர் இம்மாதம் 4ஆம் திகதி நாடு திரும்புகின்றார் என்றும், இவர் நாடுதிரும்பும் முன்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்துக் கலந்துரையாடுவார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இதேவேளை, தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்கென நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள சார்க் அபிவிருத்தி நிதியத்திற்கு 32 மில்லியன் அமெரிக்க டொலர்களை நேபாள அரசு வழங்கவுள்ளது எனக் கூறப்படுகிறது. (சி)

# இந்திய - பாக். தலைவர்கள் இன்று கொழும்பில் சந்திப்பு

கொழும்பு, ஓக. 02

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் பிரதமர் யூசப் ராஸா கிலானியும் இன்று கொழும்பில் சந்தித்து - இருதரப்பு உறவுகள் குறித்துக் கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும், பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் முஹமட் குரேஷிக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற பின்னர் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே இந்தியா - பாகிஸ்தான் பிரதமர்கள் சந்திக்கும் தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு செய்தியாளர்களிடம் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

சார்க் மாநாட்டிற்காக கொழும்பு வரவிருக்கும் இந்தியப் பிரதமரும், பாகிஸ்தான் பிரதமரும் இன்று சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடும் தீர்மானம் எனக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பில் இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

பிரதமர் சந்திப்பின் பின்னர்தான் இருநாட்டு உறவுகள் குறித்து மிகவும் முக்கியமான - காத்திரமான அறிவிப்பு ஒன்றையும் வெளியிடவிருக்கின்றோம்.

இவ்வார முற்பகுதியில் காஷ்மீரில் இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களினால் இருநாடுகளுக்கிடையே தற்போது பேணப்பட்டு வரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு பாதகம் ஏதும் ஏற்படாது.

### பாக்— இலங்கை பாதுகாப்பு ஊக்குவிப்பு ஒப்பந்தம்

இலங்கைக்கு இராணுவ மற்றும் பொருளாதார உதவி வழங்கும் நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று. இந்த இருதரப்பு உறவுகள் தொடர்ந்தும் நல்லமுறையில் பேணப்படும். இரு நாட்டு இராணுவ ஒத்துழைப்புக்களை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் பாதுகாப்பு ஊக்குவிப்பு உடன்படிக்கை ஒன்றின் நகலை பாகிஸ்தான் ஏற்கனவே இலங்கையிடம் கையளித்திருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கை விரைவில் கைச்சாத்திடும் என நம்புகிறோம். ஏனெனில் இது எமது இருதரப்பு இராணுவ உறவுகளை மேலும் வலுப்படுத்த மிகவும் உறுதுணையாக இருக்கும் - என்றார். (அ)

# வர்த்தகர்களை மிரட்டி கப்பம் பெற முற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.2

வர்த்தகர்களை மிரட்டி கப்பம் பெற முற்படுவோர் மீது உடன் நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுப்பதற்குச் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தமிழ் வர்த்தர்களுக்கு விடுக்கப்படும் தொலைபேசி மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் குறித்து வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்ப பயிற்சி பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஸ்ணன் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரம ரட்ணவிடம் முறைப்பாடு செய்துள்ளார் என அவரது பிரத் தியேகச் செயலர் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைக் காலங்களில் தலைநகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் தமிழ் வர்த்தகர்களை அச்சுறுத்தி, கப்பம் பெறுவதற்கு சிலர் முனைகின்றனர் என முக் கியஸ்தர்கள் பலர் பிரதி அமைச்சரிடம் முறைப்பாடு செய்திருந்தனர். இவ்வாறு தமக்கு வந்த தொலைபேசி இலக்கங்களையும் அவர்கள் பிரதி அமைச்சரிடம் கையளித்திருந்தனர்.

மிரட்டல், கப்பம் கோரல் தொடர்பாக தொலைபேசிகளில் அழைப்புகள் வரும் பட்சத்தில் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பிறகு தம்முடன் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிவிக்குமாறு பிரதி அமைச்சர் கோரியிருந்தார்.

எனினும் சில காலம் ஓய்ந்திருந்த இந்த நடவடிக்கை மறுபடியும் ஆரம்பமாகியுள்ளது. தமிழ் வர்த்தகர்களும் மக்களும் அச்சம் தெரிவிக்கின்றனர். இந்நிலையிலேயே பிரதி அமைச்சர் இந்த நடவடிக்கைகளுக்கான பரிகாரம் குறித்து பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சி.டி.எம்.ஏ. இலக்கம் ஊடாக அம்புலன்ஸ் சேவையை பெறமுடியும்

யாழ்ப்பாணம், ஓக.2

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினால் நடாத்தப்பட்டுவரும் அவ சர அம்புலன்ஸ் சேவைக்கு 060221 4444 என்ற சி.டி.எம்.ஏ.தொலைபேசி இலக்கம் ஊடாகவும் தொடர்புகொள்ள முடியும் என்று மாவட்ட ஆணையாளர் தெரி வித்துள்ளார். (203)

# நாளை

| | |
|---|---|
| ஆடி 19 | 03.08.2008 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | துதியை பி.ப. 02.04 வரை |
| நட்சத்திரம் : | மகம் மாலை06.11வரை |
| சுபநேரம் : | 9.04 - 10.34 |
| ராகுகாலம் : | 4.34 - 6.04 |

# செல்லையா தாத்தாவும் செல்லக்குழந்தைகளும் நூல் வெளியீட்டு விழா



யாழ்ப்பாணம், ஓக.2

சு.ஸ்ரீகுமரன் எழுதிய 'செல் லையா தாத்தாவும் செல்லக் குழதைகளும்' நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி கி.சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை மூதறிஞர் சிற்பி சி.சிவசரவணபவன் நிகழ்த்துவார்.

முதற்பிரதியை திருமதி கோ.சிறீகரன் பெற்றுக்கொள்வார். மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன் நிகழ்த்துவார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னமடு யாத்திரைத் தல திருவிழா செவ்வாயன்று

குருநகர் , ஓக.2

சின்னமடு மாதா யாத்திரைத்தலத் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின.

தினமும் நவநாள் வழிபாடுகள் சின்னமடு, நாரந்தனை, சாட்டி, கரம்பன், நெடுந்தீவு கிறிஸ்து இல்லம், புங்குடுதீவு, எழுவை தீவு, ஊர்காவற்றுறை ஆகிய பங்கு மக்கள் சார்பில் நடை பெற்று வருகின்றன.

நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நற் கருணைநாதர் திருவிழாவும் -

மறுநாள் திருவிழாத் திருப்பலி காலை 9.30 மணிக்கும் இடம் பெறும்.

பக்தர்களின் நலன்கருதி தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள் ளன என ஆலய பரிபாலகர் வணபிதா. ஜே. ஏ. அருள்தாசன் அடி களார் தெரிவித்தார்.

(202-51)

## மரண அறிவித்தல்

*திருமதி தயாபரன் அன்னலட்சுமி*



மண்டைதீவு தெற்கைப் பிறப்பிடமாக வும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாபரன் அன்னலட்சுமி அவர்கள் (30.07.2008) புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பி யப்பா- வேதநாயகி தம்பதியரின் அன்பு மக ளும் வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ் சென்றவர்களான பிரமநாயகம்- மரகதம் தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற தயாபரனின் அன்பு மனைவியும் கதிர்வாணியின் (ஆசிரியை, கொ/சைவ மங்கையர் வித்தியால யம்) அன்புத் தாயும் தில்லைநாயகம், சக்திவேல், தாமோத ரம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பரஞ்சோதி (ஓய்வுபெற்ற தபாலதிபர்), தெட்சணாமூர்த்தி (ஓய்வுபெற்ற திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்), சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற திட்டமிடல் உத்தியோகத்தர்), காங்கேசபிள்ளை (அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பாக்கியலட் சுமி (U.K.), ஈஸ்வரி, அமராவதி, கண்ணபிரான் (U.K.) ஆகியோ ரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.08.2008) ஞாயிற் றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து கல்கிசை மஹிந்த மலர் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.48, வெவசட் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு-06.
தொ.பே.: 011- 2506808
(76841)

தகவல்:
*த.காங்கேசபிள்ளை*
*(சகோதரன்),*
16/9, சீனியர் ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212229013.

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
09.11.1943

உதிர்வு
13.08.2007

**அமரர் பெரியதம்பி செல்லையா**

**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)**

திதி: பூர்வக்க பிரதமை

அன்பால் எம்மை அணைத்தாய் அப்பா!
அறிவே ஊட்டி வளர்த்தாய் அப்பா!
பண்பாய் எமையே காத்தாய் அப்பா!
பார்தனில் சிறந்திட வைத்தாய் அப்பா!
உன்போல் எமக்கு துணையார் அப்பா!
உமையே நாளும் துதிப்போம் அப்பா.

என்றும் நீங்கா நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி தெற்கு,
கைதடி. (ஔ/553990)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
**19, முருகேசர் லேன், நல்லூர்.**
(76827)

## விற்பனைக்கு

கிறேடன் காலிகுயின் (புள்ளிக்குட்டிகள்) 45 நாள் நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு.

தொடர்பு: செந்தில்
பூநாறி லேன், கொக்குவில்
(76836)

## பண்ணை வேலை ஆள் தேவை

கோழிப்பண்ணையில் வேலை செய்வதற்கு வேலையாள் (ஆண்) தேவை. அனுபவமுள்ள வர்கள் விரும்பத்தக்கது. விருப்பமுள்ளவர் கள் நாளை (03.08.2008) ஞாயிறு மதியத்தின் பின் நேரில் வரவும்.

தொடர்பு: வீனஸ் பாம்- பலாலி வீதி, [நல்லூர் A.G.A.office முன்பாக] திருநெல்வேலி.

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள்.

**1974 MBBS Doctor, 1975 எக்கவுண் டன், 1978 எஞ்சினியர், 1973 B.A.மாஸ்ரர், 1971 பிரதேச சபை கிளாக்.**

இன்னும் பல உள்ளூர், வெளியூர் ஜாதகங்கள், கனடா, லண்டன் சிற்றிசன் இருக்கிறது.

கிருஷ்ணா திருமண சேவை,
T.சுப்பையா, 'அன்னை இல்லம்',
செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு.
தொ.பே:.021 222 9032

## தவறிவிட்டது

சரவணை மேற்கு, வேலணை என் னும் முகவரியுடைய குணசீலன் மோக னேஸ்வரி என்பவரின் தேசிய அடை யாள அட்டை இல. (506752205V), இராணுவ அடையாள அட்டையும் கடற் படை அடையாள அட்டையும், சிறிய டயறி யும் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள் ளவும்.

★ அரசடி கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
★ சரவணை மேற்கு, வேலணை.
(76837)

## ஒத்திவைப்பு

'நியாப்' திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் புனரமைக்கப்படவுள்ள குளங்களை உறுதிப்படுத்துவதற்கென நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதற்கான புதிய திகதி பின்னர் அறிவிக் கப்படும் என்று யாழ். மாவட்ட கமநல அபி விருத்தித் திணைக் கள உதவி ஆணை யாளர் ம. பற்றிக் டிறஞ்சன் தெரிவித் துள்ளார்.

(203)

# புலிகளின் வர்த்தகப்பிரிவுத் தலைவர் தம்பி அண்ணா சென்னையில் கைது

சென்னை, ஓக.1

விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவர் கடந்த புதன்கிழமை மாலை சென்னையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார் என்றும் அவரை இரகசிய இடத்தில் வைத்துப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

சென்னை வளசரவாக்கத்தில் ஒரு வீட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய பிரமுகர் ஒருவர் பதுங்கியிருந்தார் எனக் கியூ பிரிவுப் பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதன்பேரில், அந்த வீட்டை கியூ பிரிவுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை அதிர டியாகப் புகுந்து சோதனை நடத்தினர். அப்போது அந்த வீட்டிலிருந்த தம்பி அண்ணா என்ற டானியல் (வயது - 46) என்பவரைப் பிடித்தனர்.

அவர் இலங்கை கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்றும், விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும், கடந்த சில மாதங்களாக அவர் சென்னையில் தங்கியிருப்பதும் விசாரணையில் தெரியவந்தது. அவர் எதற்காக சென்னை வந்தார், யார், யாரைச் சந்தித்துப்பேசினார், சதித் திட்டம் ஏதாவது தீட்டினாரா என்பது குறித்து அவரிடம் இரகசிய இடத் தில் வைத்து விசாரணை நடைபெறுகிறது. அவரைப் பற்றிய முழு விவரங்களையும் டி.ஜி.பி. கே.பி.ஜெயின் தெரிவிப்பார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்குத் தேவையான பல்வேறு சாதனங்கள், பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இரகசியமாக வாங்கி இலங் கைக்குக் கொண்டு செல்வதற்காக 'வர்த்தகப் பிரிவு' உள்ளது. சென் னையில் பிடிபட்ட தம்பி அண்ணா இந்தப் பிரிவின் தலைவராகச் செயற்பட்டு வ[illegible] என்று கூறப்படுகிறது. ஆனாலும் இந்தத் தகவலை இதுவ[illegible]ரை பொலிஸார் உறுதிப்படுத்தவில்லை.

## VACANCIES
### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### FACULTY OF SCIENCE

Reference to the above advertisement appeared in Uthayan News Paper on 27.07.2008 a printing error has been pointed out with regards to the asterisks appearing incorrectly in the 1st para where as they should have been placed in the 2nd para as indicated as follows:

**FACULTY OF SCIENCE**

Senior Professor/Professor in **Mathematics/ Statistics/Physics/Botany/Zoology/Marine Biology/Chemistry (Physical/ Organic)**

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) **in Mathematics/ Statistics/ Physics* / Botany/ Zoology/ Chemistry****

* Preference will be given to those who has B.Sc. (Eng.) degreewith specialization in Electronics.
** Preference will be given to applicants with Specialization in Physical/Inorganic Chemistry.


## இதோ உங்களுக்காக...!

**MP4 PLAYERS** Orange 8,750/=
• 2 GB • FM Radio • MP3 • Games • Voice Recording • USB Cable • Power Charger • Head Phone • Driver CD

**MP3 PEN DRIVE** Orange 6,250/-
• 1 GB (Data) • FM Radio • MP3 • USB Cable • Voice Recording • Head Phone

**DVD WRITER**
Samsung 22x Sata - 3600/=(2year warr)
Samsung 20x Sata Lightsribe - 3700/=(2year warr)
Sony 20x IDE & Sata - 4100/=(1year warr)
HP Sata Lightscribe - 4400/=(1year warr)
Combo - 3,150/=

**MOTHER BOARD**
ECS EliteGroup 945 DDR11 - 4,900/=(3year warr)
Asrock 1333 - D667 - 5,500/=(3year warr)
FoxConn 945 DDR11 - 5,900/=(3year warr)
GigaByte 945 Gcm s2c - 5,900/=(3year warr)
Intel Original 945GCNL - 8,400/=(1year warr)
Asus - 5,900/=(3year Warr)

**478 MOTHER BOARDS**
Energy DDR1 - 5,900/=(1year Warr)
Longtron DDR1(Intel ship) - 6,900/=(1year Warr)
MSI DDR11 - 5,900/=(1year Warr)
BioStar DDR11 - 6,750/=(1year Warr)

**MONITORS**
View Sonic 17" LCD wide screen - 22,500/=(3year warr
View Sonic 15" CRT Silver Black - 11,750/=(3year warr)
Samsung 15" CRT Black - 11.750/=(3year warr)
DigiMax 17" CRT Black - 14,000/=(3year warr)
Samsung 17" CRT - 15,900/=
Samsung /
Daewoo 15" LCD Wide Screen - 18,900/=(3year warr)
View Sonic 17" CRT Silver Black - 16,250/=(1year warr)

**PEN DRIVE**
Kingston 1GB - 825/=
Kingston 2GB - 1,200/=
Kingston 4GB - 2,200/=(1year warr)
Kingston 8GB - 4,600/=(1year warr)
Transcend 1GB - 850/=(3year warr)
Transcend 2GB - 1,250/=(3year warr)
Transcend 4GB - 2,300/=(3year warr)
Transcend 8GB - 4,350/=(3year warr)
Samsung 1GB - 850/=(3year warr)
Samsusng 2GB - 1,250/=(3year warr)
Samsung 4GB - 2,250/=(3year warr)

DIGITAL CAMERA
Nikon 10.1 Mega Pitch

**PRINTERS**
HP Laser Jet 1005 - 14,900/=(1year warr)
Samsung ML1640 Laser jet - 13,750/=(1year warr)
Epson LQ 300+11 - 20,900/= (1year warr)

**UPS**
Mecury 650W - 5,800/=(1year warr)
Power Tree 650W - 5,800/=(1year warr)
Power Tree 1200W(1.2Kv) - 11,900/=(1year warr)
Personal 650W - 6,200/=(1year warr)

**SCANNER**
Mustek 1248UB - 6,000/=(1year warr)
Cannon Lide25 - 6,300/=(1year warr)
HP 2410 - 9,000/=(1year warr)
HP G3010 NegativeScanner-16,750/=(1year warr)

**RAM**
Kingston DDR11 1GB - 2,650/=(2year warr)
Kingston DDR11 2GB - 4,900/=(2year warr)
Kingston DDR11 1GB KVR800 - 3,750/=(2year warr)
Kingston DDR1 512MB - 3,500/=(2year warr)
Kingston DDR1 1GB - 6,900/=(2year warr)
Transcend DDR11 512MB - 1,700/=(2year warr)

**HARD DISK**
80GB Sata - 4,700/=(3year warr)
160GB Sata - 5,400/=(3year warr)
250GB Sata - 6,500/=(3year warr)
80GB IDE - 5,800/=(3year warr)
160GB IDE - 6,350/=(3year warr)

**PROCESSER**
Intel 1.8Ghz Celeron - 5,250/=(3year warr)
Intel 3.0Ghz Celeron - 5,900/=(3year warr)
Intel 3.0Ghz pentium - 8,900/=(3year warr)
Intel 1.8Ghz DualCore - 8,000/=(3year warr)
Intel 2.0Ghz DualCore - 8,500/=(3year warr)
Intel 2.4Ghz Core2Dud - 14,400/=(3year warr)

**TONER**
HP 12A Original - 5,250/=
HP 13A Original - 5,350/=
HP 15A Original - 5,400/=
Samsung ML2010 - 7,750/=

Warranty valid for 1-3 ye[illegible]
This Offer for One Week

**HP Note Book (Laptop)** 89,000/-
Processor : Intel Core 2 Duo 2.16 GHz RAM : 1GB DDR2
HDD : 120GB Screen : 15" 4' WXGA TFT VGA : 224MB
DVD/RW Double Layer / WiFi / Bluetooth / Card Reader / Bag

**MUSIC WORLD & COMPUTERS**
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் போக்கில் மாற்றத்தை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் காத்திருக்கின்றார்கள் புலிகள்

## 'ஆனந்த விகடன்' பேட்டியில் அரசியல் பொறுப்பாளர் நடேசன் தெரிவிப்பு



சென்னை, ஓக. 02

''இலங்கை விவகாரம் தொடர்பாக இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படும் என் பதை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.''

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா. நடேசன். தமிழ் நாட்டின் முன்னணி ஏடான 'ஆனந்தவிகடன்' இதழுக்கு அளித்த பேட்டி யிலேயே நடேசன் மேற்படி நம்பிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு:-

கேள்வி:- இலங்கையில் இப்போதைய நிலைவரம் என்ன?

பதில்: - முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஸ்ரீலங்கா அரசு, தனது இராணுவத்தின் உதவியுடன் தமிழ் மக்கள் மீதும் தமிழீழத் தேசத்தின் மீதும் மோசமான இனப்படு கொலையை மேற்கொண்டு வருகிறது. தமிழர்களின் வாழ் விடங்கள் மீது வான் குண்டு வீச்சுகள், பீரங் கித் தாக்குதல்கள் எனப் பல்வேறு வடிவங்களில் தாக்கி வருகிறது. தினமும் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர். உணவுப் பொருள்களுக்கும் மருந்துப் பொருள்களுக்குமே இங்கே இப்போது பெரும் தட்டுப்பாடு. மக்களைப் பட்டினி போட்டுக் கொன்றொழிப்பதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கிவிடலாம் என ஸ்ரீலங்கா அரசு எண்ணுகின்றது. அண்மைக்காலத்தில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இத்தனை நெருக்கடிகளுக்கும் மத்தியில், இந்த மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காக விடுதலைப் புலிகள் வீராவேசத்துடன் போராடி வருகின்றனர்.

கே:- ராஜீவ் காந்தி படுகொலைக்குப்பிறகு புலிகளின் போராட்டத்துக்கு இந்தியாவின் ஆதரவு இல்லாமல் போய்விட்டது. இந்த நிலையில் குறிப்பாக தமிழக மக்களின் ஆதரவை எந்த வகையில் எதிர்பார்க்கிறீர்கள்?

ப:- இதைப் புலிகளின் போராட்டம் என்று குறிப்பிடுவதைவிட தமிழ் மக்களின் போராட் டம் என்று சொல்லுவதுதான் பொருத்தமானதாகும். எமது விடுதலைப் போராட் டத்துக்கான தமிழக மக்களின் ஆதரவு நீறுபூத்த நெருப்பாகவே இருந்து வருகின்றது. இதனைப் பிழையாக மதிப்பிட வேண்டாம். வரலாற்று ரீதியாக இன,கலாசார ரீதியாக தமிழக மக்களுக்கும் எமக்கும் தொப்புள் கொடி உறவு இருந்து வருகின்றது. அவர்களின் ஆதரவு எமக்கு எப்போதும் இருந்தேவரும்.

கே:- தனி ஈழம் மற்றும் விதுடுதலைப் புலிகள் போராட்டம் நியாயமென்று கருத்துக் கணிப் பில் பங்கேற்றவர்கள் தங்கள் கருத்துகளை எங்கள் நிருபர்களிடமும் எங்கள் இணையத் தளத்திலும் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால் ராஜீவ் கொலை வழக்கில் பிரபாகரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் அதில் எழுப்பப் படடிருக்கிறது. இது பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப:- உணர்வை வெளிப்படுத்திய அத்தனை தமிழ் உள்ளங்களுக்கும் நன்றி. எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் இவர்கள், எமது தலைவர் தொடர்பாகத் தெரிவித்திருக்கும் கருத்துகள் தவறானவையாகும். வெகுவிரைவில் இவர் களது கருத்துகளில் மாற்றம் ஏற்படும் என உறுதியாகச்சொல்கின்றேன்.

### மக்கள் பலத்தோடு வெல்லுவோம்

கே:- இன்னும் எத்தனை காலத்துக்கு இந்தப் போராட்டம்?

ப:- விடுதலைப் போராட்டங்களுக்கு கால எல்லைகள் வகுத்துப் போராடுவதில்லை. ஆனால் முழு மக்கள் பலத்தோடு எமது விடுதலையை விரைவாக வென்றெடுப்போம்.

கே:- அனைத்துலக சமூகம் உங்களையும் ஸ்ரீலங்கா அரசையும் எப்படிப் பார்க்கிறது?

ப:-அனைத்துலக சமூகம் ஸ்ரீலங்கா அரசு பற்றி நன்றாகவே புரிந்திருக்கிறது. அண் மையில் கூட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையிலிருந்து ஸ்ரீலங்கா நீக்கப் பட்டுள்ளது. இலங்கைத் தீவில் தொடர்ந்து நிகழும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உலக நாடுகள், மனித உரிமை அமைப்புகள் தங்களது கண்டனங்களைத் தெரிவித்து வரு கின்றன. அனைத்துலக சமூகம் எமது போராட்டத்தைப் பற்றியும் இயக்கத்தைப் பற்றியும நன்றாகப் புரிந்து வைத்துள்ளது. எமது விடுதலைப் போராட்டம் அதர்மத்தை எதிர்த்து, தர்மத்துக் காக நடத்தப்படும் போராட்டம் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

### இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கையில் மாற்றம் வரும் என எதிர்பார்க்கலாம்

கே:- இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை மாறியிருக்கிறதா?

ப:- ஸ்ரீலங்கா அரசின் இராஜதந்திர நகர்வுகள் எப்போதுமே இந்திய வெளியுறவுக் கொள்கைக்குப் பாதகமானவையாகவே இருந்து வந்துள்ளன. இந்தியாவுக்கு எதிரான சக்திகளுடனேயே அவர்கள் வரலாற்று ரீதியான உறவுகளையும், தொடர்புகளையும் பேணி வருகின்றனர். சிங்களக் கட்சிகளின் இந்தியா தொடர்பான அரசி யல் கொள்கைகள் என்பன எப்போதுமே இந்தியாவின் வெளியுற வுக் கொள்கைக்கு எதிரானவையே. தற்போதைய போர்ச்சூழ் நிலையில் அது உச்சக் கட்டத்தை நோக்கி நகர்ந்துகொண்டு இருக் கின்றது. இந்த நிலை யில் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படும் என்பதை நம்பிக் கையுடன் எதிர்பார்க் கின்றோம்.

# 329 ஓட்டங்களைச் சேர்த்தது இந்தியா ஹர்பஜன் சுழலில் இலங்கை திணறல்

காலி, ஓகஸ்ட் 02

காலியில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி பெற்ற 329 ஓட்டங்களுக் குப் பதிலளித்து ஆடிவரும் இலங்கை அணி நேற் றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக் கெட்டுகள் இழப்புக்கு 215 ஓட்டங்களைப் பெற்றிருந் தது. இந்திய சுழல் பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் 4 விக் கெட்டுகளை வீழ்த்தி இலங்கை அணியை அச்சுறுத்தி வருகின்றார்.

காலியில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்ட் போட்டி யின் முதல் நாள் ஆட்டத்தில் இந்திய அணி 4 விக்கெட் டுகள் இழப்புக்கு 214 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஷேவாக் 128 ஓட்டங்களுடனும், லக்ஸ்மன் 13 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் ந[illegible] பெற்றது. மிகவும் பொறுமையாக ஆடிக்கொண் டிருந்த லக்ஸ்மன் 39 ஓட்டங்களுடன் மெண்டிஸின் சுழலில் வெளியேறி நேற்றைய விக்கெட் வீழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து தினேஸ் கார்த்திக் 7 ஓட்டங்களு டன் மெண்டிஸிடம் சரணடைந்தார்.

மறுமுனையில் முரளியின் சுழல் வேலைகாட்ட கும்ளே 4 ஓட்டங்களுடனும், சஹீர்கான் 2 ஓட்டங்களு டனும் பவிலியன் திரும்பினர். ஒரு முனையில் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் மறுமுனையில் ஷேவாக் தனது அதிரடியாட்டத்தைத் தொடர்ந்தார்.

மெண்டிஸின் சுழல் மீண்டும் அச்சுறுத்த ஹர்பஜன் சிங் ஓர் ஓட்டத்துடன் 'போல்ட்' ஆனார். சிறப்பாக ஆடிய ஷேவாக் டெஸ்ட் அரங்கில் தனது 5 ஆவது இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார். இறுதி விக் கெட்டாக இஷாந்த் சர்மா ஓட்டமெது வும் பெறாமல் மெண்டிஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள் யூ. ஆக இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் 329 ஓட்டங்க ளுடன் முடிவுக்கு வந்தது.

இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்த ஷேவாக் 231 பந்துகளில் 22 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 201 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

பதிலளித்து ஆடத் தொடங்கிய இலங்கை அணி ஆரம்பத் துடுப் பாட்ட வீரரான வன்டோட்டை 4 ஓட் டங்களுடன் சஹீர் கானின் வேகத்தில் இழந்தது. பின்னர் ஜோடி சேர்ந்த வர்ண புர - சங்ககார ஆகி யோர் அணியை ஆரம்பச் சரிவிலி ருந்து மீட்டனர். இருவரும் தம்மி டையே 133 ஓட்டங் களைச் சேர்த்த நிலை யில் வர்ணபுர 66 ஓட்டங்களுடன் ஹர் பஜனி டம் விக் கெட்டைப் பறி கொடுத்தார். தொடர்ந்து மிரட் டிய ஹர்பஜன், 68 ஓட்டங்களுடன் சங்ககாரவையும் வெளியேற்றினார்.

அடுத்து வந்த திலான் சமரவீர 14 ஓட்டங்களுடனும், டில்சான் ஓட்டமெது வும் பெறாமலும் ஹர் பஜனிடம் விக் கெட்டுகளைப் பறி கொடுத்தனர். நேற்றைய இரண் டாம் நாள் ஆட்டம் போதிய வெளிச் சமின்மை கார ணமாக முன்ன தாகவே நிறுத்தப் படும் போது இலங்கை 5 விக் கெட் இழப்பிற்கு 215 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (சீ)



இப்போது விற்பனையில்
படித்து விட்டீர்களா?
இவ்வாரத்துச் சுடர்ஒளியில்
சுடச்சுட வாசியுங்கள்
தெற்கால் நிராகரிக்கப் படும் புலிகளின் யுத்தநிறுத்தம்
கொழும்பின் போக்கு இந்தியாவின் கொதிப்பு
வன்னியில் பே(ர)ரவலம்
படைத்தலைமையிடம் இருந்தும் பேரினவாதத் திமிர்க் கூச்சல்!
சிக்கினார் ரபோவன்
எரிகிற வீட்டில்..... -இந்தியாவின் உதவிகளுக்கு கொழும்பு தந்த பரிசுகள்
மனிதனுக்குள் ஒரு மிருகம் (மதன் எழுதும் தொடர் கட்டுரை)
இருளே ஒளிமயம் - நேர்காணல்
மிஸ்டர் முனிசாமி - 1.2.1
இப்போது விற்பனையில்
விமானக் கட்டண விலை ரூ: 35/-
இன்னும் பல கருத்துக்களை கிளறும் பல்சுவை அம்சங்களுடன்...
உங்கள் உதயன் முகவரிடம் கேட்டு வாங்குங்கள்.
இப்போது விற்பனையில்


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பஞ்சலிங்கம் செல்லமுத்து



நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப்பிறப்பிட மாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பஞ்சலிங்கம் செல்ல முத்து நேற்று (01.08.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும் செல்வராசா, ஜெயந்தினி, சிவராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் கவிதா புலந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பவித் திரா, கஜரூபன், பரங்குன்றன், கஜமுகன், லக்சியன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2008) சனிக் கிழமை அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர் வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.* (76850)

தகவல்:
செ.புலந்திரன் (இந்திரன்)
மருமகன்

### திருமதி செபஸ்தியம்மா லோறன்ஸ்

கொழும்புத்துறை, வளன்புரத்தைச் சேர்ந்த திருமதி செபஸ்தியம்மா லோறன்ஸ் சிலாபத்தில் நேற்று (01.08.2008) வெள்ளிக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற யோவன் லோறன்ஸ் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் றெயிலின் பத்மா, கருணைநாதன், மரியறோசா, மீரா, அமல் ஆகியோரின் அன்புத் தாயாரும் மி.அருள்தாஸ், செ.யோசப் பாலா, நீ.அலோசியஸ், அ.சுதா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று சனிக்கிழமை மாலை 5மணிக்கு சிலாபம் சென்.பேனடேற் ஆலயத்தில் இரங்கற் திருப் பலி ஒப்புக் கொடுக் கப்பட்டு சிலாபம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*814/2, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (76849)

தகவல்:
யோசப்பாலா குடும்பம்

### திருமதி மாகிரெட் மரியநாயகம்

ஒட்டகப்புலத்தைச் சேர்ந்த பிரபல முறிவு நோவு வைத்தியர் செல்லத்துரை மரியநாயகம் அவர்களின் மனைவி மாகிரெட் மரியநாயகம் நேற்று (01.08.2008) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*859/6, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# புலமைப்பரிசில் விசேட கருத்தரங்கு இன்று ஆரம்பம் செவ்வாயன்று சாவகச்சேரி கலாசார மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஒக.2

'உதயன்' பத்திரிகை நிறுவனமும் கொழும்பு யுனிலங்கா நிறுவனமும் இணைந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இன்றுமுதல் நடத்தவுள்ள விசேட கருத்தங்கு தென்மராட்சியிலும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

தென்மராட்சி மாணவர்களின் நலன் கருதி சாவகச்சேரி சிவன் வீதியில் உள்ள கலாசார மண்டபத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் இக் கருத்தரங்கு நடை பெறவுள்ளது.

இதே வேளை இன்று- இளங்கலைஞர் மன்றத்தில் காலை 8.30 மணிக்கும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை - ஆனைக்கோட்டை துரைஐயா மண்டபத்தில் காலை 8.30 மணிமுதலும் -

நாளை மறு தினம் திங்கட்கிழமை - வடமராட்சி மாலு சந்தி பிரதேச மண்டபத்தில் காலை 8.30 மணிமுதலும் - கருத்தரங்குகள் நடை பெறவுள்ளன.

திருகோணமலை உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். கணேசலிங்கமும் யாழ். மாவட்ட விரிவுரையாளர்களும் இக் கருத்தரங்குகளை நடத்துவர். (அ-1)

## நேற்று மாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் சகல பகுதிகளிலும் காண முடிந்தது. அது தெளிவற்ற கலங்கள் நிலையிலேயே காணப்பட்டது.

அதன் பின்னர் மாலை 5.02 மணிய ளவில் 0.5சத வீதம் சூரியன், சந்திரனால் மறைக்கப்பட்டது. மாலை 5.40மணிக்கு 20சதவீதம் தொடக்கம் 22சத வீதம் சூரியன் சந்திரனை மறைத்துக் கொண்டது. மாலை 6.02 மணியளவில் சூரியன் வானத் தில் இருந்து மறைந்தது.

நேற்று நிகழ்ந்தது பூரண சூரியகிர கணம் அல்ல என்பதும் பகுதியான ஒன்றே என்ப தும் குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் இலங்கையில் பகுதிச் சூரிய கிரகணம் (Partial Eclipse) 1996 ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாக புவியியல் சாஸ்திர ஆர்வலர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இலங்கையில் பூரண சூரிய கிரகணம் தென்படும் சாத்தியம் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

## பதின்மூன்றாவது திருத்த சட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுபீட்சத்தை எட்டிவிடமுடியாது. அவ்வாறான ஒரு நெருக்கமான உறவைப்பேணிக் கொள்ளும் சந்தர்ப்பமாக சார்க் மாநாட்டில் எனது பிரசன்னத்தை நான் கருதுகிறேன் - என்று கூறினார்.

சார்க் மாநாட்டைத் திறம்பட ஒழுங்கு செய்தமைக்காக மஹிந்த ராஜபக்ஷவைப் பாராட்டிய இந்தியப் பிரதமர், இலங்கையுடனான உறவுக்கு இந்தியா உயர்ந்த முக்கியத்துவம் அளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதமரின் வாழத்துச்செய்திக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, இந்தியா பல்வேறு வழிகளிலும் வழங்கிவரும் உதவிகள் மற்றும் ஒத்தாசைகளுக்கு நன்றி கூறினார்.

நாட்டின் சுபீட்சத்தை நோக்கித் தனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் ஜனாதிபதி கூறினார்.

கிழக்கில் அண்மையில் மாகாணசபை தேர்தல் நடத்தப்பட்டு அங்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் - அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டு அதற்கு சமாந்தரமாக அனைத்துக் கட்சிகள் மாநாட்டின் யோசனைகளின்படி நாட்டின் பிரச்சினைக்கு, அரசியல் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் -

வடக்கில் - பொதுமக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படக்கூடாது என்ற மிகுந்த எச்சரிக்கையுடன் - அரசுப்படைகள் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் மூலம்பாரிய வெற்றிகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் ஜனாதிபதி கூறினார்.

இந்திய மீனவர் தொடர்பான பிரச்சினை பற்றியும் இரு தலைவர்களும் பேசினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## குருதிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9மணிக்குயாழ்ப்பாணம்பிரதானவீதியில் உள்ள கலைத் தூதுக் கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

2007-2008 காலப்பகுதியில் பத்துத் தடவைகளுக்கு மேல் இரத்ததானம் வழங்கியவர்கள் இன்று கௌரவிக்கப்படுகின்றனர்.

நடமாடும் இரத்ததான முகாமை ஒழுங்கமைத்து சிறந்த ஒழுங்கமைப்பாளர், குருதி மாற்று பிரயோக சேவையில் சேவையாற்றி ஓய்வுபெற்றவர்களும் இந் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த வங்கியிலும், நடமாடும் இரத்ததான முகாம்களிலும் இரத்ததானம் செய்த ஏனைய தன்னார்வ குருதிக் கொடையாளர்களையும் இன்றைய விழாவுக்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு இரத்த வங்கியினர் கேட்டுள்ளனர். (அ-1)

## தமிழகத்தில் புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

62.59 வீதமானவர்கள் விரும்புகிறார்கள். அதேவேளை தலையிடவே் கூடாது என்று 12.58 வீதத்தினரும், நிலைமை கைமீறினால் மட்டுமே தலையிடவேண்டும் என்று 24.81 வீதத்தினரும் இந்தக் கருத்துக்கணிப் பில் தெரிவித்திருக்கின்றனர்.

தரைப்படை, கடற்படை, வான்படை என்று விடுதலைப் புலிகள் வளர்ச்சியடை வது பெருமைக்குரிய விடயம் என்று கருத்துக் கணிப்பில் கலந்துகொண்டவர்களில் 46.24 வீதத்தினர் கூற, அது இந்தி யாவுக்கு ஆபத்து என்று 18.59 வீதத்தி னரும், இரண்டுமே இல்லை என்று 35.16 வீதத்தினரும் கூறுகின்றனர்.

விடுதலைப் புலிகளை வைகோ, ராமதாஸ், திருமாவளவன், பழநெடுமாறன் போன்ற தமிழகத் தலைவர்கள் ஆதரிக்கின்றமை சரியான நிலைப்பாடுதான் என்பது 49.36 வீதமான மக்களின் கருத்து. ஆனால் 13.61 வீதத்தினர் அதனை ஆபத்தான நிலைப்பாடு என்று வர்ணிக்க, 37.02 வீதத்தினர் வேறு லாப நோக்கம் கருதியது என்று கூறுகின்றனர்.

ஆனந்தவிகடன் தமிழக மக்களிடம் தனது செய்தியாளர்கள் மூலமாகவும் இணையத்தளம் ஊடாகவும் ஏராளமான மக்களை உள்ளடக்கி இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியது. (அ-சி)

## பயங்கரவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும் கூடி ஆராய உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியப் பிரதமருக்கு வரவேற்பு

வெள்ளிக்கிழமை நண்பகல் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இந்தியப் பிரதமரை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும் மூத்த அமைச்சர்கள் பலரும் வரவேற்றனர்.

பின்னர் அவருக்கு இலங்கைக் கடற்படையினர் அணிவகுப்பு மரியாதையை வழங்கினர். இதன் பின்னர் அவர் இந்திய விமானப்படையின் ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இன்று ஆரம்பமாகவுள்ள சார்க் உச்சி மாநாட்டில் மன்மோகன் சிங், தலைமைப் பொறுப்பை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைப்பார். (அ-சி)

## வவுனிக்குள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்துள்ளனர் எனவும் புலிகள் தரப்பு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மேற்கு வவுனிக்குளத் தில் உள்ள பாலையடிப் பகுதியில் இருந்து மும்முனைகளில் நேற்று வெள்ளிக் கிழமை காலை 6 மணியளவில் படையி னர் செறிவான எறிகணைச் சூட்டாதரவுட னும் எம்.ஐ.24 ரக ஹெலிகொப்டரின் பீரங்கித் தாக்குதலுடனும் முன்நகர்வு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மல்லாவியைக் கைப்பற்றும் நோக்கில் மும்முனைகளில் படையினர் மேற்கொண்ட முன்நகர்வினை முறியடிக்கும் தாக்குதலை நேற்றிரவு 7 மணிவரை விடுதலைப் புலி கள் தொடர்ச்சியாக மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் முறியடிப்புத் தாக்குதலை அடுத்து பாரிய உயிரிழப்பு - படைக்கல இழப்புச் சேதங்களுடன் படையினர் பின்வாங்கி ஓடிவிட்டனர்.

இம்முறியடிப்புத் தாக்குதலில் 30க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ள னர். 60க்கும் அதிகமான படையினர் படுகாயமடைந்துள்ளனர். படையினரின் 'லான்ட்றோவர்' ஊர்தி உட்பட பெருமள வான படைக் கலங்கள், படைப் பொருள்கள், படையின ரின் சடலங்கள் ஆகியன தங்களால் கைப் பற்றப்பட்டுள்ளன - எனவும் புலிகள் அறிவித்துள்ளனர். (அ-சி)

## இனப்பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந் தன், மாவை. சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், கனகசபை ஆகியோரே இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தியப் பிரதமருடன் அவரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், கொழும்புக்கான தூதுவர் அலோக் பிரசாத் மற்றும் இந்தியப் பிரதமரின் செயலாளர் ஆகியோர் சந்திப்பில் பங்குகொண்டனர்.

சமார் பதினைந்து நிமிட நேரம் நீடித்த இந்தச்சந்திப்பின்போது இலங்கைத் தமிழ் மக்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ள பேரவல நிலையை சம்பந்தன் சுருக்கமாக விவரித்தார்.

அரசிடம் இருந்து தமிழருக்கு இனி நீதி கிடைக்காது

"புலிகள் மீதான யுத்தம் என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது கொடூரப் போர் கட்ட விழ்த்து விடப்பட்டிருக்கின்றது. லட்சக் கணக்கில் தமிழர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து உணவுக்குக்கூட வழியின்றி அல்லற்படுகின்றார்கள். பட்டினியும் போர்ப் படுகொலைகளும் தமிழ்ச் சமூகத்தைப் பீடித்து நிற்கின்றன. பேச்சு மூலமான அமைதித் தீர்வுக்கான வாய்ப்பு முற்றாகவே அடிபட்டுப் போய் விட்டது. தமிழர்களுக்கு நீதியான தீர்வைத் தராமல் அவர்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைப் படுத்துவது ஒன்றே இலங்கை அரசின் திட்டம் என்பது நிரூபணமாகிவிட்டது.

"எனவே, அமைதித் தீர்வுக்கு வாய்ப் பும் இல்லை. தமிழர்களுக்கு இந்த அரசிடமி ருந்து நீதியும் கிடைக்காது. எனவே, இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு என்பனவற்றைக் கட்டிப்பிடித்துக் கொண்டி ராமல், அதற்கு வெளியில் வந்து இந்தத் தீவில் தமிழருக்கு நீதியும், நியாயமும் கிடைக்கக் கூடிய ஒரு தீர்வுக்கு இந்தியா ஒத்துழைத்து அதனை முன்னெடுக்க வேண்டும்.

"இலங்கை அரச இப்போது தான் முன்னெடுக்கும் நடவடிக்கைத் திட்டங்களுக்கு இந்திய அரசின் முழு ஆதரவும் ஆசி யும் இருப்பதாகக் கூறிக் கொள்கின்றது. அப்படிக் கூறியபடியேதான் தமிழின அழிப்பு நடவடிக்கைகளை அது முன் னெடுக்கின்றது.

"இவ்வாறு தமிழர்கள் மீது ஒரு போரவலம் சுமத்தப்படுவதற்கு இந்தியாவும் துணை போவது தமிழர் களுக்கு அதிர்ச்சி அளிக்கும் விடய மாகவே உள்ளது."


- இப்படி இரா. சம்பந்தன் தெரிவித்தார் என்று கூறப் படுகிறது.

இந்திய அரசின் ஆதரவு இருப்பதாக கூறுவது தவறு

அமைதித் தீர்வுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளுக்கு இந்திய அரசின் ஆதரவு இருப்பதாகக் கூறப்படுவது தவறு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வலியுறுத்திய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், யுத்தம் தீர்வல்ல என்பதையும், மனித உரிமைகள் நிலைவரத்தில் ஒரு மாற்றம் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் என்பதையும் தாம் இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார் என்றும், மீண்டும் சந்திக்கும்போதும் வலியுறுத்துவார் என்றும் பதிலளித்தார் எனக் கூறப்பட்டது.

குறுகிய நேரச் சந்திப்பு என்பதால் தாங்கள் விரிவாக சில விடயங்களைச் சுட்டிக்காட்ட முடியாமல் போயிற்று எனத் தமிழ்க் கூட்டமைப்பினர் தெரிவித்த போது, விரிவான பேச்சுக்காகப் புதுடில் லிக்கு வருமாறு இந்தியப்பிரதமர் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசந்துறைச் சிமெந்து ஆலையை இந்திய நிறுவனம் ஒன்று சுவீகரித்து அங்குள்ள சுண்ணாம்புக்கல்லை வெட்டியெடுப்பது தொடர்பாக தங்களது ஆட்சேபனை அடங்கிய மனு ஒன்றை மாவை சேனாதிராஜா எம்.பி. இச்சமயத்தில் இந்தியப் பிரதமரிடம் கையளித்தார் என்றும் தெரியவந்தது. (அ-உ)




**தகவல் தொழில் நுட்ப கருத்தரங்கம்**
**மைக்கொம்யூட்டர் கணினி சஞ்சிகை**
தனது ஒருவருட நிறைவை முன்னிட்டு யாழ். நகர்மைய றோட்டரக்ட் கழகத்துடன் இணைந்து இந் நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளது.
இடம்:- யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்.
காலம்:- 03 ஒகஸ்ட் 2008 ஞாயிறு காலை 9.30 தொடக்கம் 2.30 வரை
- மைக் கொம்பியூட்டர் சஞ்சிகை ஆசிரியர் தலைமையில் முன்னணி தகவல் தொழிநுட்பவியலாளர் குழுவினர் இதில் பங்கேற்று கருத்துரைகள் வழங்குவதோடு மட்டுமல்லாது உங்கள் சந்தேகங்களுக்கு உடனடி பதிலும் தருகின்றனர்
- மாணவர்கள் , ஆசிரியர்கள், அரச அலுவலர்கள் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற விடயங்களில் கருத்துரைகள் இடம்பெறும்.
அரிய சந்தர்ப்பம்! அனுமதி இலவசம்! ஆர்வமுள்ள அனைவரும் திரண்டு பயன் பெறுக!
குறிப்பு:- மைக்கொம்யூட்டர் 8 ஆவது இதழ் வெளியிடப்படும். பழைய இதழ்கள் பெறலாம், கணனி நிலையங்களின் விசேட சலுகைகள் பெற்றுக்கொள்ளலாம்
மேலதிக விவரங்களுக்கு : 0777563213 / 0214591871
Speed IT net. 72/28, Panikar Lane, Thirunelvely.

அனைத்து தரப்பினருக்குமான
**ONLINE CLASSES**
அனைத்து நாட்களிலும் ஆரம்பம்
8.30a.m 10.30a.m 2p.m 4p.m 5p.m
Dip. In Visual Basic
Dip. In Internet e-mail
Dip. In Microsoft Office
Dip. In Desktop Publishing
Dip. In Hardware Engineering
Dip. In Computerized Accounting
பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறைக்கால பயிற்சிநெறிகள்
GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
Kids Programming (Year3-10)
Start on:04.06.08.2008
Softview Computer College
55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170

**TITA**
**Rural IT Training Centre**
140 Navalar Road, Jaffna
114 Duch Road, Chavakachcheri
சேவை நோக்குடன் மிகக் குறைந்த கட்டணத்தில் இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன் இயங்கிவரும் பயிற்சி நிலையத்தில், பாடசாலை விடுமுறையை முன்னிட்டு ஒரு மாத கால பயிற்சி நெறிகள் ஆரம்பம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Basic Computer Application
(Introduction to Computer ,Ms Word,Ms Excel,Ms Powerpoint)
Introduction to ICT
Inter net & e-mail (10 Hrs)
Visual Basic 6.0 (IT Students)
Adobe Photoshop
Online Classes
புதிய பிரிவு 04/08/2008 ஆரம்பம்
மேலதிக விபரங்களுக்கு நேரில்

தரம் 5 மாணவர்களுக்கான
கொழும்பு வினாத்தாள்
இல - 4, 5, 6 ஒன்றாக (முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட வினாக்கள்) கிடைக்கும் இடங்கள்
★ பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
★ அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
★ சரண்யா தொலைத் தொடர்பகம் - யாழ். இந்து ஆர. பாடசாலை அருகில்
★ துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்
★ நாவலர் - ஆனைப்பந்தி

**ACA** கோவில் வாசல், கே.கே.எஸ். வீதி, இணுவில
(76805)
மின்புலம்
பௌதிகவியல்
திரு. குமரன்
A/L 2009,2010
ஆரம்பம்: 04-08-2008 Mon: 4.00pm

**Sky Computer (pvt) Ltd**
Affiliated With Irish International University (U.K)
No, 05 Devos Avenue, Colombo - 04, Tel:- 0115 - 335261 Fax:- 0115 - 371229
No, 162, Main Street, Jaffna. (யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் அருகாமையில்) Tel:- 0779053545
Course Details
* Diploma In Ms Office - 2 Months
* Diploma In DTP - 2 Months
* Diploma In Hardware - 2 Months
* Diploma In Computerized Accounting -3 Month
Kids Program - சிறுவர்களுக்கான பயிற்சிநெறி
Internet & Email - 2 Weeks
மாணவர்களிற்கான விடுமுறைகால விஷேட பிரிவுகளும் ஆரம்பமாகின்றது
Today You Learn Tomorrow You Lead.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் ... 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org